Registered No. M-4483.

யுத்த சஞ்சிகை

மலர் IV.] 1943-ம் ௵ செப்டெம்பர் ௴ 24உ, வெள்ளிக்கிழமை [இதழ் 4

ரஷ்யாவின் சம்மட்டி அடி

"ரஷ்யப் படைகள் நாஜி அக்கிரமக் காரர்களை அடிக்கும் சம்மட்டி யடியைக் கண்டு, ஒவ்வொரு அமெரிக்கரும் மயிர் கூர்ச் செறிகிறார்கள். 1941-42-ம் வருஷத்தில் ரஷ்யர்களை வென்று ஜெர்மானியர்கள் முன்னேறியதைப் போல ஒரு இடத்திலாவது இந்தக் கோடை காலத்தில் ஜெர்மானியர்கள் வெற்றி பெற முடியவில்லை."

"பாதரட்சை, கால் மாறியிருக்கிறது ஆகையால் அது அதிகமாகக் காலைக் கடிக்கிறது 1812-ம் வருஷம் நெப்போலியன் விரட்டப்பட்டுப் புறமுதுகு காட்டி ஓடியது போன்ற தோர் மகத்தான, இராணுவ வெற்றி, இன்று ரஷ்யாவிற்குக் கிடைத்திருக்கிறது. கார்க்கோப், ஸ்டாலினோ முதலிய பலமான அரண்களை ரஷ்யர்கள் மீண்டும் கைப்பற்றி விட்டார்கள். இதன் பயனாக உக்ரேனுக்கும் 'டானெட்ஸ்' பேசினுக்கும் வழி யேற்பட்டு விட்டது. அதனால் லட்சக் கணக்கான ஏக்கர் செழிப்பான நிலங்களும் நூற்றுக் கணக்கான ஊர்களும் விடுதலை பெற்றன. இதுபற்றி, உலகம் முழுவதுமே ஊக்கங் கொள்ளுகிறது. ஏனென்றால், ஜெர்மானியர்களை அடியோடு ரஷ்யாவை விட்டு விரட்டி, ஜெர்மனியையே தாக்கத் தக்க நிலைமையில் ரஷ்யர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்."

"வடாப்பிரிக்கப் போராட்டம், சிசிலியை நாம் கைப்பற்றிக் கொண்டது, இத்தாலியில் போராடுவது, ஹாலந்து பெல்ஜியம் பிரான்சு ஆகிய நாடுகளின் பேரில் நம் விமானங்களைக் கொண்டு தாக்கி, ஜெர்மன் விமானங்கள் அங்கே வரும்படி செய்தது, ஆகியவற்றால் ஜெர்மனியின் பலத்தைச் சிதறச் செய்தோம். ரஷ்யப் படைகள் லெனின்கிராடிலிருந்து கருங்கடல் வரை முன்னேறுவதற்கு, இது ரஷ்யர்களுக்கு மிகவும் உதவியா யிருந்தது."

"பால்கன் நாடுகள், பிரான்சின் தென் பகுதி, இங்கிலீஷ் கால்வாய் ஆகிய பகுதிகளில் ஜெர்மன் டிவிஷன்களை வைத்திருக்கும்படியான நிர்ப்பந்த நிலைமையை உண்டாக்கி, ரஷ்யர்கள் முன்னேறுவதற்கு நாமும் உதவுகிறோமென்று நமக்குத் தெரியும். நான் உள்ளதைக் குறைத்துக் கூறுகிறேனென்று தான் நினைக்கிறேன்."

மிஸ்டர் ரூஸ்வெல்ட் அமெரிக்க அரசாங்க சபைக்கு செப்டெம்பர் 17-ம் தேதி விடுத்த செய்தி.

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம் : மிஸ்டர் ரூஸ்வெல்ட் ..	1
ரஷ்யாவின் சம்மட்டி அடி	1
முரசொலி	2
தலையங்கம் : ரஷ்யருக்கு வெற்றிமேல் வெற்றி.	3
போர்முனை நிகழ்ச்சி விளக்கம்	4
ஜெர்மன் ரகசியப் போலீசாரின் வேதம் ..	5
“ஜெர்மன் நீர்மூழ்கிகளால் நமக்குச் சேதமே கிடையாது”	6
“முசோலினி முயற்சிகளெல்லாம் படுதோல்வி”	8
ஸ்டாலின் பாராட்டுதல்கள்	10
கொலைகார நாஜிகள்	11
ஜப்பானிய கப்பற்படைச் சேதங்கள்	11
என்ன ஆச்சரியம்	12
மூழ்கடிக்கப்பட்ட டேனிஷ் கப்பல்கள் ..	13
பாட்டு : நாலாம் இந்தியச் சேனையின் நற்புகழ்.	14
யுத்த நாட் குறிப்புக்கள்	15

முரசொலி

“ஹிட்லருடைய கொள்ளைக் கூட்டத்தாருக்கு சோவியத் மக்கள் எப்படிப் பட்டவர்கள் என்பது பற்றி அறிவிக்க வேண்டிய காலம் வரத்தான் போகிறது பாஸிஸ்ட்கள் தாம் செய்த கொடுமைகளுக் கெல்லாம் தண்டனையை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும். அவர்கள் மீது கருணை காட்டப்படு மென்று அவர்கள் எதிர்பார்க்கவே வேண்டாம். இரத்தத்திற்கு இரத்தம், உயிருக்கு உயிர், பழி வாங்கியே தீருவோ மென்பது தான் சோவியத் மக்களின் முடிவு.’

—தோழர் ஷெப்ர்னிக் (லண்டனுக்கு வந்திருக்கும் சோவியத் தொழிலாளர் சங்கத் தூதுக் கோஷ்டித் தலைவர்), செப்டெம்பர் மாதம் 20-ம் தேதி கூறியது.

* * * * * *

“தாம் வென்றதோர் நாடாக எங்கள் நாட்டை ஜெர்மானியர்கள் நடத்துவதற்கு அனுமதிக்க மாட்டோம். அவர்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, எங்கள் நகரங்கள் பாழாகும்படி விடமாட்டோம். எங்கள் சகோதரர்களையும் சகோதரிகளையும் ஜெர்மனிக்கு இழுத்துச் செல்லும்படி இடங் கொடுக்க மாட்டோம். ஜெர்மானியர்கள் எங்கள் வீடுகளைக் கொள்ளையடிக் வும் எங்கள் சொத்துக்களைத் திருடவும், எங்கள் படையினரையும் தொழிலாளர்களையும் கொல்லவும் எங்கள் பெண் மக்களை அவமதிக்கவும் நாங்கள் விடமாட்டோம். இந்த யுத்தத்தின் பயனாக ஏராள மான ரத்த வெள்ளம் ஓடியது. இந்தப் போராட்டத்தை நடத்த வேண்டு மென்று முடிவு கட்டிய வர்கள் அவர்கள் தான். போருக் கிழுத் வர்களும் அவர்கள் தான். அத்தனையும் அவர்களுடைய நன்மைக்காகவே தான். ஆகவே, அவர்கள் எங்களைக் கேவலமாக மதித்து அடிமைகளைப் போல நடத்த நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.”

“இன்றையத் தினம் எங்கள் அனைவருக்கும் ஒரே ஒரு கொள்கை தான். அதாவது ‘ஜெர்மானியர்களை விட்டு விலகுங்கள்’ என்பது தான் அந்தக் கொள்கை. டான், லிபியா, துனீசியா, கலப்ரியா ஆகிய இடங்களில் எங்களைக் காட்டிக் கொடுத்து விட்டு ஓடிய இந்த ஜெர்மானியர்களுக்கு, கௌரவத்தைப் பற்றிப் பேச யோக்கியதை ஏது? பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் நம்மோடு சேர்ந்திருந்து ப்லேவ், விட்டோரியோ வெனிடோ என்னு மிடத்திலும் போராடினார்கள். அவர்களுடைய முடிவான நோக்கம் இத்தாலியை மீட்டு, அதில் ஒற்றுமையை யுண்டாக்கி பலப்படுத்தி விட வேண்டியது தானென்று கொஞ்சமும் தயக்கமில்லாமல் பிரகடனம் செய்து விட்டார்கள். யுத்தத்தினால் நேர்ந்த சேதத்தை ஈடு செய்யவும், எதிர் காலத்தில் நம் நாடு பலத்தோடிருப்பதற்கும், சமயம் வருகிற போது அவர்கள் உதவத் தவற மாட்டார்கள்.”

“எல்லா வகைகளிலும், எல்லா இடங்களிலும், எல்லா சமயங்களிலும் ஜெர்மானியர்களோடு போராடுங்கள். பட்டணங்களை விட்டு விட்டுக் கிராமங்களுக்குப் போங்கள்; போக்கு வரவு சாதனங்களை வெட்டி விடுங்கள்; பாலங்களைத் தகர்த்து விடுங்கள்; கப்பல் தங்கு மிடங்களை நாசஞ் செய்யுங்கள். எங்கேனும் எதிரிகளின் சிறு கூட்டத்தைக் கண்டால் அவர்களைத் தாக்கி, அவர்களிடமிருக்கும் தளவாடங்களையும் மற்றவைகளையும் நாசம் செய்யுங்கள்; இவை எல்லாவற்றையும் விட, இந்தப் போராட்டத்தைக் கடைசி வரை கைவிட்டு விடக் கூடாது. நாமெல்லோரும் விரும்புவது நியாயமானதும் நிரந்தரமானதுமான சமாதானம். இந்த சமாதானத்தை பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் நமக்கு வழங்குவார்கள். இவற்றை, ஜெர்மானியர்கள் நமக்கு வழங்க மறுக்கிறார்கள்.”

—மார்ஷல் படாக்ளியோ, ஆல்ஜியர்ஸ் வானொலி நிலயத்திலிருந்து செப்டெம்பர் 20-ம் தேதி இத்தாலிய மக்களுக்கு ஒலி பரப்பிய செய்தி.

* * * * * *

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV] 1943-ம் ஞு செப்டெம்பர் மீ 24வ. [இதழ் 4

ரஷ்யருக்கு வெற்றி மேல் வெற்றி

ரஷ்யர்கள் வெற்றி மேல் வெற்றி பெற்று வருகின்றனர். ஜெர்மானியர்களைப் போர் முனைகளி லிருந்து பின் வாங்கி ஓடும்படி விரட்டி யடிக்கின்றார்கள். இவர்களுடைய படை பலம் பெரிது. இது மட்டுமல்ல. ஜெர்மானியர்கள் நிலை கொள்ளாமல் தத்தளிக்கிறதற்கு மற்றும் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக தமக்கு இது வரை உற்ற நண்பர்களாக உதவிக் கொண்டிருந்த இத்தாலியர்கள், பகைவர்களாக மாறி விட்டார்கள். இரண்டாவதாக இத்தாலியின் தென் பகுதி, நேச நாட்டினர் வயப்பட்டு விட்டது. மூன்றுவதாக பிரிட்டிஷ் அமெரிக்க விமானப் படைகள் ஓயாது இரவும் பகலும் ஜெர்மனியிலுள்ள முக்கியமான கேந்திர ஸ்தானங்களின் மீது வெடி குண்டுகளை எறிந்துக் கொண்டிருக்கின்றன. நான்காவதாக ஜெர்மானியர் கைப் பற்றியுள்ள நாடுகளில் அவர்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சிகள் வலுத்துக் கொண்டிருக்கின்றன. ஐந்தாவதாக, மத்யதரைக் கடலில் அச்சு நாடுகளுக் கிருந்த ஆதிக்கம் அழிந்தது. இத்தாலிய கப்பற்படைகளில் பெரும் பகுதி, மால்டாவிற்கு வந்து நேசநாடுகளிடம் சரண் புகுந்துவிட்டது. ஆகவே, நேசநாட்டினர் மத்யதரைக் கடலில் கொஞ்சமும் பயமில்லாமல் போக வழி திறந்துவிட்டது. அதுமட்டுமா? கிழக் கோடிப் போர்முனைக்கும் இந்துமகா சமுத்திரத்திற்கும் தம் படைகளையும் தளவாடங்களையும் இலகுவில் அவர்கள் அனுப்ப வழி திறந்துவிட்டது. இனி ஜெர்மனி நாலா பக்கங்களிலுமிருந்து தாக்கப்படும் என்பது உறுதி. நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தபடி ஜெர்மானியர்கள் கைப்பற்றிய நாடுகளில் அவர்களுக்கு விரோதமான பிரசாரம் வெகு அதிகமாயிருக்கிறது. இதற்குக் காரணம் அந்நாட்டவரின் நாட்டுப் பற்றுமட்டுமல்ல. முக்கியமாக அந்நாட்டவர்களை ஜெர்மானியர்கள் நடத்தும் கொடுமைகள் தான் காரணம். "அடாது செய்வோர் படாது படுவோர்" ஆகவேதான், ஜெர்மானியர்களோடு சம நிலையிலிருந்த இத்தாலியுங்கூட, ஜெர்மானியரின் உறவைக் கைவிட்டுவிட்டது. அன்றியும், ஜெர்மனிக்கு விரோதமாக நேசநாடுகளுடன் சேர்ந்துவிட்டது. இவ்வளவையும் சமாளிப்பது போதாதென்று உள் நாட்டுக் குழப்பங்கள் நேர்ந்துவிடாதபடியும் ஐந்தாம் படை வேலைகள் நடை பெறுதபடியும் தற்காத்துக் கொள்ள வேண்டும். ஆகவே இது ரஷ்யர்களுக்கு மிகவும் சாதகமான நிலைமை. "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" என்னும் பழமொழியை ரஷ்யர்கள் நன்கு உணர்ந்தவர்கள். ஆகவே தான், ஜெர்மானியர்களை அடிமேல் அடி அடித்து ரஷ்யர்கள் வென்று கொண்டு வருகிறார்கள். ரஷ்யப் போர்முனை 800 மைல்கள் நீளம். முக்கியமான தளங்களை ரஷ்யர்கள் கைப்பற்றி வருகிறார்கள். முக்கியமான இடங்களில் ஆறுகளைக் கடக்கிறார்கள். அப்போது ஜெர்மன் படைகள் பின் வாங்கி நீப்பர் ஆற்றங் கரைக்கு ஓடுகின்றன. இதன் பயனாக மூன்று ஜெர்மன் அரண்கள் ஆபத்திற் குள்ளாகியிருக்கின்றன. இவற்றுள் ஒன்று ஸ்மாலென்ஸ்க். இது ஹிட்லரின் யுத்தக் காரியாலயமா யிருந்தது. மற்றொன்று கியேவ். இது உக்ரேனின் தலை நகரம். இன்னொன்று நிப்ரோ பெட்ரோப்ஸ்க். இது நீப்பர் ஆற்றின் வளைவிலுள்ள கேந்திர ஸ்தானமான ஒரு நகரம்.

சென்ற வாரம் ப்ரியான்ஸ்க் ரஷ்யர் வசமானது. இது மகத்தான தோர் வெற்றி தான். ஏனென்றால், இது ஒரு பெரிய ரயில்வே ஜங்ஷன். ஜெர்மானியர்கள் ஓரெல்-கர்ஸ்க்-கார்க்கோப் போர்முனை ஜெர்மானியர் வச மிருக்கும்போது, ப்ரியான்ஸ்க் அவர்களுக்கு மிகவும் உபயோகமா யிருந்தது. இதை வடக்கி லிருந்தும் தெற்கி லிருந்தும் ரஷ்யப் படைகள் வந்து தாக்கிய போது, ஜெர்மானியர்கள் அதைக் காலி செய்து கொண்டு வெளியேறி விட்டனர். இப்படி நேரு மென்று எதிர்பார்த்தது தான்.

மாஸ்கோ பெருவழிக்கு 30 மைல்களுக்கு அப்பாலுள்ள யார்ட்சிவோவுக்கு ரஷ்யர்கள் வந்தடைந்தனர். அதற்கு அடுத்துத் தெற்கே ஸ்மாலென்ஸ்க் இருக்கிறது. இவ்விரண்டிற்கும் இடையே ஆழமான சதுப்பு நிலங்கள் இருக்கின்றன. இவை ஸ்மாலென்ஸ்க் நகரத்திற்கு ஒரு அரண் போல் அமைந்திருக்கின்றன. அதற்கும் தெற்கே ஸ்மாலென்ஸ்க்குக்கும் ராஸ்லாபலுக்கும் இடையே போகும் ரயில் பாதையை வெட்டி விட்டு, அந்நகரத்தை வளைத்துக் கொள்ள வேண்டு மென்று ரஷ்யர்கள் எண்ணியிருக்கிறார்கள். கியேவ் போர்முனையில், ரஷ்யர்கள் வெகுதூரம் முன்னேறிப் போயிருக்கிறார்கள். கர்ஸ்க்-கியேவ் ரயில்வேயில் உள்ள நெழின் என்னும் நகரத்தை ரஷ்யர்கள் கைப்பற்றி விட்டார்கள். இதற்கும் கியேவுக்கும் 50 மைல்தூரந் தான் இரண்டு திசைகளிலும் சோவியத் படைகள் படர்ந்து வருகின்றன.

நீப்பர் ஆற்றிற்கு முன்னதாக உள்ள ஜெர்மன் அரண்களில், டெஸ்னு ஆறு தான் கடைசி அரண். இந்த ஆற்றை ரஷ்யப் படைகள் ப்ரயான்ஸ்க், நவ்கராட், செவெர்ஸ்கி, ஆகிய இடங்களிலும், கோமெலுக்குக் கீழ் திசையிலும் கடந்து விட்டன. குர்ஸ்க்-கார்க்கோப் ரயில்வேக்குத் தெற்கில், ரோம்னி என்னுமிடத்தை ரஷ்யப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. ப்ரிலூக்கி என்னுமிடத்தையும் செஞ்சேனைகள் கைப்பற்றின.

இனி அச்சு நாடுகளில் மற்றொன்றான ஜப்பானைப் பற்றி ஒரு சிறிது கவனிப்போம். அடிப்படையாகவே ஜப்பான் ஒரு பெரும் தவறு செய்தது "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்னும் செம்மொழியை யடியோடு மறந்தது. சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் ஜப்பானில் ஒரு பெரும் பூகம்பம் ஏற்பட்டபோது வெகு விரைவாகவும் ஏராளமாகவும் கருணையுடன் அமெரிக்கா ஜப்பானுக்கு உதவியனுப்பியது. அக்காலத்திருந்த ஜப்பானிய மக்களும் அரசாங்கமும் பத்திரிகைகளும் அமெரிக்காவின் வள்ளற்றன்மைக்கு பெரிதும் நன்றி செலுத்தின. "அமெரிக்கா மீது ஒரு ஈ எறும்பு உட்காரவும் யாம் சகிக்கமாட்டோம்" என்று வீரம் பேசின. 'அமெரிக்காவை விரோதியாகக் கருதுகிறவர்கள் தம்மையும் விரோதிகளாகக் கருதக் கடவர்' என்று முழங்கின. 20 ஆண்டுகளுக்குள் இத்தனையையும் மறந்துவிட்டனர். "குதிரை கீழே தள்ளியது மட்டுமன்றி குழியும் பறித்தது" என்பது போல, அமெரிக்கர் மீது, தானே முதலில் போர் தொடுத்தது. அதுவும் துரோகத்தனமாக. ஜப்பானிய தூதர் வாஷிங்டனில் சமரசம் பேசிக் கொண்டிருக்கும் போதே, அமெரிக்காவிற்குச் சொந்தமான பெர்ல் துறை

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

ஆறு மாதங்களுக்குப் பின் ஹிட்லர் பிரசங்கம்

ஆறு மாத காலமாக மௌனம் சாதித்துக் கொண்டிருந்த ஹிட்லர் தன் வாயைத் திறந்து ஜெர்மன் மக்களுக்கு ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். அப்போது இத்தாலிய மக்களின் விருப்பத்திற்கு விரோதமாகத் தான், அது போரில் இழுத்து விடப்பட்டதென்று அவரே ஒப்புக் கொள்ளுகிறார். தன்னையும் பொது மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்க வேண்டிய அவசிய நிலைமையில் தான் இல்லை யென்றும், தான் பேச வேண்டிய காலம் வந்து விட்டதென்றும் குறிப்பிட்டு இத்தாலியின் வீழ்ச்சி நெடு நாட்களுக்கு முன்னதாகவே எதிர் பார்க்கப்பட்டது தானென்றும் கூறினார்.

"இன்றைய தினம் இத்தாலியைச் சரணடையச் செய்தவர்கள் 1939-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில், இத்தாலி யுத்தத்தில் இறங்கக் கூடாதென்று தடுத்து விட்டனர்" என்றும் கூறினார்.

இதிலிருந்து, இத்தாலிய மக்களுக்கு போராட மனமே கிடையாது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஹிட்லர் மேலும் கூறியதாவது:—"நான் தலையிட்டதன் பயனாகத் தான் வடாப்பிரிக்கா, இத்தாலிய சாம்ராஜ்யத்திற்குச் சொந்தமாக நிலைத்தது; இல்லாவிட்டால் 1940-ம் வருஷத்திலேயே அதை இத்தாலி இழந்திருக்கும். 1941-ம் வருஷம் யுத்தத்தில் இறங்கும்படி இத்தாலியை நிர்ப்பந்தித்ததும் நான் தான். இவ்வளவு தியாகங்கள் நாம் செய்திருந்தும், போல்ஷிவிக் படைகள் ஜெர்மனியைத் தாக்கி அதனால் பெரும் ஆபத்துக்கள் நேரக்கூடும் எனத் தக்க இந்த சந்தர்ப்பத்தில், அவர்களை என் பக்கம் சேர்த்து வைத்துக் கொள்ள என்னால் முடியவில்லை."

"முறைப்படி ஐந்தாம் படை வேலை செய்தவர்கள் தான் சரணடையும்படியானதோர் நிலைமையை இத்தாலியில் உண்டாக்கினார்கள்," என்று கூறினார்.

முழு மனதோடு இத்தாலி போரில் இறங்கவில்லை யென்று, ஹிட்லர் கூறியதைப் போலவே ஜெர்மன் இராணுவத் தலைவர் ஒருவர் கூடக் கூறியிருக்கிறார். அவர் செப்டெம்பர் மாதம் 10-ம் தேதி பெர்லின் வானொலி நிலயத்திலிருந்து செய்த தோர் ஒலி பெருக்கிப் பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது:—

"ஆப்பிரிக்காவிலும், சிசிலியிலும் கிழக்குப் போர் முனையிலும் கூட, இத்தாலியப் படைகளின் உத்தியோகஸ்தர்களால் தான் அநேக தோல்விகள் நேர்ந்தன."

முக்கியமான செல்வாக்குள்ள ஒரு கூட்டத்தினர் இத்தாலியில் இருந்தார்கள். இவர்கள் இத்தாலி போராட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாதென்று முதன் முறையாக முசோலினியே ஒப்புக் கொண்டிருக்கிறார். செப்டெம்பர் மாதம் 18-ம் தேதி அவர் இத்தாலிய வானொலி நிலயத்திலிருந்து ஒலி பெருக்கியதோர் பிரசங்கத்தில், ஜூலை மாதம் 25-ம் தேதி நடைபெற்ற முக்கியமான சம்பவங்களைக் குறித்தும், அதன் பிறகு நடந்தவை பற்றியும் அரசாங்கத்தை நடத்தும் கட்சியைக் குறித்தும் குறிப்பிட்டார். அப்போது அவர் கூறியதாவது:—

"புதுக் கட்சிக்கு என்ன பெயர் வைப்ப தென்பது பற்றி ஜனங்கள் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தான் ஆட்சி முன்னேற்றத்திற்குத் தடைகள் விதித்துக் கொண்டிருப்பவர்கள்; சமூகத் துறையில் ஆட்சி முறை வெற்றி பெற ஒட்டாதபடி ஐந்தாம் படை வேலை செய்கிறவர்களும் இவர்கள் தான். தேசியத் துறையிலும் சாம்ராஜ்யத் துறையிலும் நாடு முன்னேறாத படி ஐந்தாம் படை வேலை செய்து தடுக்கிறவர்களும் இவர்கள் தான்......யுத்த காலம் முழுவதிலும் அரச குடும்பம் முழுதும் தோல்வி மனப்பான்மை தான் கொண்டிருந்தது. ஜெர்மானியர்களுக்கு விரோதமான பிரசாரம் அங்கிருந்து தான் தோன்றியது. போராட்டத்தை மிகவும் புத்திசாலித் தனமாகவும் மனக் கட்டுப்பாடுகளுடனும் கவனித்துக் கொண்டு வந்தார்களே யொழிய, அதில் கொஞ்சங் கூட அக்கறை கொள்ளவில்லை. இளவரசர் தானே தெற்கு இத்தாலியிலுள்ள படைகளுக்குத் தலைமை வகித்து நடத்துவதாகக் கூறினாரே யொழிய, போர் முனையிலேயே அவர்கள் தலை காட்டவில்லை. இந்தச் சூழ்ச்சியைத் திட்டமிட்டு நிறைவேற்றியவர்கள் இத்தாலிய அரச குடும்பத்தார்கள் தான். இது பற்றி எனக்குச் சந்தேகமே கிடையாது. இவர்களுக்கு உதவியாக மார்ஷல் படாக்ளியோ, கோழைகளான படைத் தலைவர்கள், பாசிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அயோக்கிய அங்கத்தினர்கள் முதலியோர் வேலை செய்தனர்."

முஸோலினிக்குக் கோபம் வருவது சகஜந்தான். இதில் என்ன விசேஷ மென்றால், ஆரம்ப கால முதல் தன் கட்சியிலுள்ள முக்கியஸ்தர்களின் ஆதரவு தனக்கில்லை யென்றும் இத்தாலிய மக்களும், மன்னருங் கூடத் தன்னை ஆதரிக்க வில்லை யென்றும அவரே ஒப்புக் கொள்ளுகிறார்.

* * * *

இத்தாலியர் போரில் இழுத்து விடப்பட்டனர்.

இத்தாலிய மக்களில் பெரும்பாலோர் யுத்தத்தில் வீணாக இழுத்து விடப்பட்டார்கள். ஆகவே, இப்போது நேச நாட்டுப் படைகளுக்குத் தம்மாலான உதவி செய்ய அவர்கள் ஆவலாயிருக்கிறார்கள். இது பற்றி சந்தேகமே கிடையாது. மார்ஷல் படாக்ளியோ ஆல்ஜியர்ஸ் வானொலி நிலயத்திலிருந்து செப்டெம்பர் 20-ம் தேதி திங்கட்கிழமை இத்தாலிய மக்களுக்கு செய்ததோர் வானொலிப் பிரசங்கத்தில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டார்:—

"இன்றையத்தினம் நாம் எதிர்த்து நின்றால் தான் தலைதூக்கி வாழ முடியும். இந்த ஒரே வழிதான் உண்டு. இத்தாலியர்களே! இதற்கான பலம் உங்களுக்கிருக்கிறது. இதைச் சாதிக்கும் முறையும் உங்களுக்குத் தெரியும். வட்ரியாடிக் கடலுக்கு அப்பால் நடைபெறும் கொரில்லா யுத்தம் எப்படி நடை பெறுகிற தென்று உங்களுக்குத் தெரியும். ஜெர்மானியர்கள் நமக்குத் தீங்கிழைக்கப் பார்க்கிறார்கள். பிரிட்டிஷாருடனும், அமெரிக்கர்களுடனும் சேர்ந்து ஜெர்மானியரை வெல்லப் போராட வேண்டியது உங்கள் கடமை. இந்த ஜெர்மானியர்களோடு புத்தியில்லாத சில இத்தாலியர்களும் சேர்ந்திருக்கிறார்கள். இவர்கள், இத்தாலியர்கள் என்று அழைக்கப் படுவதற்கே தகுதியற்றவர்கள். தாங்கள் ஜெர்மானியர்களுடைய கட்டளைப்படி நடக்கத் தலைப்பட்டு விட்டார்கள். இப்படிப்பட்டவர்களையும் போராடி வெல்ல வேண்டியிருக்கிறது. தாம் வென்று கைப்பற்றிய நாட்டைப் போல, நம் நாட்டை நடத்தும்படி ஜெர்மானியர்களை அனுமதிக்கக் கூடாது. தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, நமது பட்டணங்கள் பாழாகும்படி விடமாட்டோம். நம் சகோதர சகோதரிகளை ஜெர்மனிக்கு இழுத்துக் கொண்டு போகும்படி விடமாட்டோம். எங்களுடைய ஊர்களைச் சூறையாடவும் எங்கள் சொத்துக்களைத் திருடவும், எங்கள் படையினரையும் தொழிலாளர்களையும் கொல்லவும் எங்கள் பெண்களை அவமதிக்கவும் ஜெர்மானியர்களை அனுமதிக்க மாட்டோம்."

போர்முனையில் ஜெர்மானியர் துரோகம்.

இத்தாலிய அரசாங்கக் கொள்கையைப் பற்றி ஜெர்மானியர்கள் குறை கூறுவது பற்றி மார்ஷல் படாக்ளியோ கூறியதாவது:—

"டான், லபியா, துனீசியா, கலப்ரியா ஆகிய போர் முனைகளில் நமது படைகளைக் கை விட்டுவிட்டு ஓடிவந்து விட்ட ஜெர்மானியர்களுக்குக் கௌரவத்தைப் பற்றி பேச என்ன யோக்கியதை இருக்கிறது? ப்லேவ், விட்டோரியோ வெனிடோ ஆகிய இடங்களில் பிரிட்டிஷாரும் அமெரிக்கர்களும் நம்மோடு சேர்ந்திருந்து போராடினார்கள். இத்தாலி நல்ல பலத்தோடும் ஒற்றுமையோடும் மீட்சி பெறவேண்டு மென்பது தான், தம் முடிவான நோக்கமென்று தயக்கமில்லாமல் அறிவித்து விட்டார்கள். யுத்தச் சேதங்களை ஈடு செய்து கொள்ளுவதிலும், நம் எதிர்கால நிலைமையை அமைப்பதிலும் உதவுவதற்கு அவர்கள் ஒருபோதும் பின் வாங்கமாட்டார்கள்."

நேச நாடுகளிலுள்ள பொது ஜனத் தலைவர்கள் இந்த வேண்டுகோளுக்குச் செவி சாய்த்திருக்கிறார்கள். செப்

(13-ம் பக்கம் பார்க்க)

முகத்தைத் தாக்கிப் பிடித்துக் கொண்டது. இதை யடுத் தடுத்து பல வெற்றிகள் அவர்களுக்குக் கிடைத்தன. இவற்ருல் மிகுந்த பெருமை கொண்டிருந்தனர். ஆனுல் இந்தப் பெருமைக ளெல்லாம் நிலைக்குமா? "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையு" மல்லவா? ஏடு புரண்டு விட்டது. தூரக் கிழக்கு நாடுகளில், தாம் கைப் பற்றிய தீவுகளை யெல்லாம் ஒவ்வொன்ருக இழந்து கொண்டு வருகிருர்கள். பர்மாவை இந்தியாவி லிருந்து விமானப் படைகள் போய்த் தாக்கிக் கொண்டிருக்கின்றன. இப்போது மத்தியதரைக் கடலி லிருக்கும் நேச நாட்டுக் கப்பற் படை பசிபிக் சமுத்திரத்திற்கும் இந்துமகா சமுத்திரத்திற்கும் வரப்போகிறது.

அப்போது ஜப்பான் கொட்டம் அடங்கிவிடும். இப்படிப் பட்டதோர் நிலைமை தமக்கு ஏற்படப் போகிற தென்ற நினைப் போடு சீனர்களின் கூட்டுறவைக் கோருகின்றனர். சீனர்கள் ஜப்பானியர்களைப் போல துரோகிகளல்ல. நேச நாட்டினர் தமக்குச் செய்துள்ள உதவிகளை ஒரு நாளும் மறக்க மாட்டார்கள். அன்றியும் இன்று வரை இடையருது தம்மைத் தாக்கிக் கொண்டிருந்த ஜப்பானியர்கள் பசுத் தோல் போர்த்திய புலி என்று அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிருர்கள். ஆகவே, ஜப்பானியர்கள் சூழ்ச்சி சீனர்களிடம் பலிக்கப் போவதில்லை. முசோலினியைப் போலவே டோஜோவும் மண்ணைக் கவ்வ வேண்டிய காலம் சமீபத்தி லிருக்கிறது.

ஜெர்மன் ரகசியப் போலீசாரின் வேதம்

கொள்ளையும், பெண் சோரமும் இலஞ்சமும் தான்

'மாக்ஸிம்ஸ்' ஹோட்டல் திருவிளையாடல்கள்

யுத்தம் ஆரம்ப மாவதற்கு முன்பு, இன்ப வாழ்விற்குத் தலை சிறந்த நாடாக விளங்கியது பிரான்சு தேசம். அதன் தலை நகரம் பாரிஸ். இங்கே, பிற நாட்டு மன்னர்களும் வந்து தங்க, தக்க விடுதி ஒன்றிருந்தது. அதற்கு 'மாக்ஸிம்ஸ் ஹோட்டல்' என்று பெயர். இதன் எழிலைப் பாராட்டி இலக்கியப் புலவர்களும் தம் இலக்கியங்களில் குறிப்பிட்டார்கள் என்ருல், இதன் உயர்விற்கு வேறு சான்றும் வேண்டுமா? இந்திர லோகம் இதுவோ என்று எண்ணத் தக்கபடி எல்லா வகை இன்பங்களுக்கும் உறை விடமாக விளங்கியது. 'மாக்ஸிம்ஸ் ஹோட்டலை'ப் பற்றி தெரியாதவர்கள் ஐரேப்பாக் கண்டத்திலேயே கிடையாது என்று சொல்லலாம். இதன் புகழொளி எட்டு திக்குகளிலும் வீசியது. நாகரிக நங்கையரும் இளைஞர்களும் கூடி நடன மாடவும், பல வகைப் பானங்களைப் பருகி, இன்பத்தில் ஊறி, தம்மையும் மறந்து தூங்கிக் கிடக்கவும் 'மாக்ஸிம்ஸ் ஹோட்டல்' ஏற்றதோர் இடமென விளங்கியது.

சில ஆண்டுகள் கடந்தன. பாரிஸ் நகரத்தில் பல புதுத் தெருக்கள் அமைந்தன. அங்கே வானமளாவிய உயரிய கட்டிடங்கள் கிளம்பின. எழில் தேவி இடம் மாறினுள். இங்கே திருமகள் விலாசம் தாண்டவ மாடியது. எனவே, 'மாக்ஸிம்ஸ் ஹோட்டல்' பெற்றிருந்த புகழ் மங்கத் தலைப்பட்டது. நவீன நலங்கள் நிறைந்த புதிய ஹோட்டல்களுக்கே அனைவரும் போகத் தலைப்பட்டனர். "தோன்றின மறையும்" என்பது உலகம் ஒப்புக் கொண்ட உண்மை யல்லவா? "மாக்ஸிம்ஸ் ஹோட்ட"லுக்கு உண்டான புகழும் மறைந்தது. இலக்கிய வாயிலாக இதன் புகழைப் படித்திருந்த ஒரு சில அந்நியர்கள் மட்டும், அவ்வப்போது அங்கே வருவதுண்டு. என்ருலும், அதன் முதலாளி ஒரு பிடிவாதக் காரர். அதன் பழம் பெருமையை மீண்டும் பெற வேண்டும் என்பதிலேயே மிகுந்த கண்ணுங் கருத்துமா யிருந்தார்.

உலகம் முழுதும் மாறுதல்கள் தோன்றின. முடியிழந்த மன்னர்களும் கூட லண்டனிலும் பாரீஸிலும் வந்து சரண் புகுந்தார்கள் என்ருல், அம் மாறுதல்களின் கொடுமை தான் என்னே!

கொஞ்ச நாட்கள் கடந்தன. பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் இடையே 'ரைன்' நதி ஓடுகிறது. 'ரைன்' நதிக்குக் கீழ் கரையிலுள்ள ஜெர்மானிய இளைஞர்கள் நாள்தோறும் அணி வகுத்து நகர வீதி வழியாக ஊர்வலமாகப் போய்க் கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் பாடிக் கொண்டு போயினர். அப் பாட்டுகளின் பொருள், இளைஞர்களின் உள்ளத்தே ஒரு புத்தெழுச்சியை ஊட்டியது. நாட்டுப் பற்றை நிலை நாட்டியது. யுத்தம் மூளக் கூடும் என்பதற்கான சின்னங்கள் அப்போது தான் தோன்றத் தலைப்பட்டன.

நிற்க, "பட்ட மரம் தழைத்தது" போல 'மாக்ஸிம்ஸ் ஹோட்டல்' சற்று மும்முரமாக வேலை செய்யத் தொடங்கியது. புத்துயிர் பெற்று விளங்கியது. தான் இழந்த பண்டைப் பெருமையை மீண்டும் பெற ஆரம்பித்தது. இந்தப் புது வாழ்வு இதற்கு எப்படி வாய்த்தது என்பது பற்றி யாருக்கும் சாதாரணமாகத் தெரியாது. ஒரு நாள் பெரும் புகழ் வாய்ந்த 'ஸ்பினெல்லி' என்னும் நடிகை, அந்த ஹோட்டலில் நடனம் செய்தாள். மறு நாள் இரவு பல நாடகங்களுக்கு ஆசிரியையான 'சாச்சா கைத்ரி' அங்கே விருந்துண்டாள். 'மாக்ஸிம்ஸ் ஹோட்டல்' தன் பண்டைப் பெருமையை இப்போது மிஞ்சி விட்டது.

இந்த ஹோட்டலுக்கு இந்தப் புது வாழ்வு வாய்த்த தெப்படி என்று உணர்ந்து கொள்ள வேண்டுமானுல், அதன் களியாட்டங்களையும் வெறியாட்டங்களையும் விடுத்து, பெர்லின் நகரத்திற்குப் போக வேண்டும். அங்கே 'ஹோயர்ச்சர் ரெஸ்ட்ரான்' என்ெருரு 'ஹோட்டல்' இருக்கிறது. இது 'மாக்ஸிம்ஸ் ஹோட்டலு'க்குச் சமமானதல்ல. அங்கே அனைத்தும் மந்தமாகவே தோன்றும். என்ருலும், அங்கே வழங்கப்படும் உணவு வகைகள் மிகச் சிறந்தன. ஜெர்மன் அந்நிய நாட்டுக் காரியாலயத்தார் அங்கே அடிக்கடி போவதுண்டு. வில்லியம்ஸ்ட்ராஸி மாளிகையில் நடைபெறுகிற சம்பவங்களைப் பற்றி யெல்லாம், இங்கே சாதாரணமாகப் பேசுவார்கள். அரசாங்கப் பிரசார இலாக்காக்காரர்கள் இங்கே பத்திரிகைக்காரர்களுக்கு விருந்துகள் நடத்துவதுண்டு. இந்த ஹோட்டல், ஜெர்மன் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்று கூட சொல்லப்பட்டது.

இந்தச் சமயத்தில், ஐரோப்பாவில் சாராயம் (ஷாம்பெய்ன்) விற்றுக் கொண்டிருந்த ஒருவன் படிப்படியாக நாஜிக் கட்சியில் உயர் நிலையை யடைந்து கொண்டிருந்தான். இவனுடைய பெயர் ரிப்பன்ட்ராப். இந்தப் பெயரை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவன் மகா சூழ்ச்சிக்காரன். ஒரு சமயம், பாங்கியில் இவன் கணக்கில் பணம் இல்லா திருக்கும் போதே, செக் எழுதிக் கொடுத்து ஏமாற்ற முயற்சித்தவன். இவன் ஜெர்மன் சாராய வியாபாரியின் மகள் ஒருத்தியைக் கலியாணம் செய்து கொண்டான். பிறகு தன்னை 'பான் ரிப்பன்ட்ராப்' என்று கூறிக் கொண்டான். அவன்செய்த வேலைக ளெல்லாம் மகா கேவலமானவை.

தான் சாராய விற்பனைக்காரனுக இருந்தபோது, ரிப்பன் ட்ராப் பாரீசுக்குப் போயிருந்தான். அப்போது 'மாக்ஸிம்ஸ் ஹோட்டல்' சிறப்பைப்பற்றிக் கேள்விப் பட்டிருந்தான். பிறகு இவன் ஹிட்லருடைய கையாளானுன். ஹிட்லருடைய நோக்கங்கள் ஈடேறுவதற்கு என்னென்ன பூர்வாங்க வேலைகளைச் செய்ய வேண்டுமோ, அவ்வளவையும் செய்து முடிக்க முனைந்தான். ஒவ்வொரு நாடாக விரைந்து சென்ருன். ஆங்காங்கே, அரசாங்கத்திடம் அதிருப்தி கொண்டுள்ளவர்களையும், அரசாங்கத் துரோகிகளையும் கண்டான். ஏராளமான தொகைகளை அவர்களுக்கு லஞ்சம் கொடுத்தான். அவர்களைத் தன் வலையில் சிக்க வைத்தான். இவர்களைக் கொண்டு அந்தந்த நாடுகளில் நாஜிகளுக்கு ஆதரவாகக் கலவரங்களைக் கிளப்பி விட ஏற்பாடு செய்தான். அப்போது, ஜெர்மன் அரசாங்கத்தின் தூதராக அவன் லண்டன் வரவிருந்தான். பிறகு ஜெர்மன் அந்நியநாட்டு மந்திரியாகவும் இருந்தான். இவன் தான் 'மாக்ஸிம்ஸ் ஹோட்டல்' புத்துயிர் பெற்றதற்குக் காரணம் என்று தெரிகிறது. அதாவது, ரிப்பன்ட்ராப் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது, ஆட்டோ அபெட்ஸ் என்பவரையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு, பிரான்சின் தலைநகரான பாரீஸ் நகரத்தில் விட்டுப்போனுர். இந்த ஆட்டோ ஆபெட்ஸ் தான் 'மாக்ஸிம்ஸ் ஹோட்டல்' மீண்டும் தலை தூக்கியதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. இந்த ஹோட்டலை நடத்தும் உரிமையை பெர்லின் நகரத்திலுள்ள 'ஹோயர்ச்சர் ரெஸ்ட்ரான்' விலைக்கு வாங்கிக் கொண்டார்களாம். இந்த 'ஹோயர்ச்சர் ரெஸ்ட்ரான்' ஜெர்மன் அந்நிய நாட்டிலாக்காக்காரர்களால் பெரிதும் ஆதரிக்கப்பட்டு வந்தது என்றும், அதுவே ஜெர்மன் அரசாங்கத்திற்குச் சொந்தம் என்றும் சொல்லப்பட்டு வந்தது. 'மாக்ஸிம்ஸ் ஹோட்டலை', ஹோயர்ச்சர்ஸ் ரெஸ்ட்ரான் சொந்தக்காரர்கள் வாங்கியதன் நோக்கமென்ன? அதன் பொருட்டு ஏன் பெருந்தொகைகளைச் செலவு செய்தார்கள்? 'மாக்ஸிம்ஸ் ஹோட்டல்' புத்துயிர் பெற்றதனுல், அவர்களுக்கு இலாபமென்ன? "சோழியன் குடுமி சும்மா ஆடுமா"? அந்த ஹோட்டலுக்கு நல்ல வருவாய் ஏற்பட்டது. அதன் பங்குக்காரர்களுக்கு தகுந்தபடி இலாபம் கிடைத்தது. ஜெர்மன் அரசாங்க அந்நிய நாட்டிலாக்கா இதில் அக்கரை கொண்டதற்கு மற்ெருரு காரணமும் உண்டு. இதை பிரான்சில் ஐந்தாம் படையினரின் முக்கிய ஸ்தாபனமாக அமைத்துக் கொள்ளும் பொருட்டுத் தான் ரிப்பன்ட்ராப்பும் அவனது கையாளான ஆட்டோ அபெட்சும் இதில் அக்கரை கொண்டார்கள். பிறகு, ஜெர்மன் ரகசியப் போலீசார் சந்திக்கு மிடமாக இதை உபயோகித்தனர். இந்த இரகசியப் போலீசார் தான் பிற்பாடு பிரஞ்சு மக்களைச் சிறைப்படுத்தினுர்கள்; கொலை செய்தார்கள். பிரான்சில், குறுகிய நோக்கமுடைய அரசியல் வாதிகள், இரகசியக் கொள்ளைக்காரர்கள், பாசிஸ்டுகள், அரைகுறைப் பேர்வழிகள் ஆகியோர் ஹிட்லரோடு சமரசம் செய்து கொள்ளலாமென்று நினைத்தனர். 'மாக்ஸிம்ஸ் ஹோட்டல்' மூலமாக வீசப்பட்ட வலையில் சிக்கியவர்கள் தான் இவர்கள்.

அதன் பிறகு தான், பிரான்சுக்கே மகா கடுமையான கஷ்டகாலம் ஆரம்பமானது. பாரிஸ் நகரத்தில் ஜெர்மன் படையினர் வந்திறங்கி விட்டனர். ஜெர்மன் இராணுவ உத்தியோகஸ்தர்கள் நேரே தம் மோட்டார் கார்களில் 'மாக்ஸிம்ஸ் ஹோட்டலு'க்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய உண்டிச் சாலையாக அது பயன்பட்டது. ஜெர்மன் அரசியல்வாதிகளும், அவர்களுடைய கையாட்களான பிரஞ்சுக்காரர்களும் கூட அங்கே தான் உணவருந்திஞர்கள். பாரிஸ் நகர மக்களுக்கெல்லாம் உணவு கிடைக்காமல் பட்டினியாலும் பசியாலும் வாடிக்கொண்டிருந்தபோது, 'மாக்ஸிம்ஸ் ஹோட்டலு'க்கு வருகிறவர்களுக்கு மட்டும் உணவுப் பஞ்சமே கிடையாது. ஜெர்மானியர்களுக்கும் அவர்களுடைய கையாட்களுக்கும் மட்டுந் தான் சிறந்த உணவுகளெல்லாம் கிடைத்தன. கொழுத்துத் தடித்திருந்த ஜெர்மான் கொயரிங் கூட இங்கே அடிக்கடி வருவதுண்டு. ஆட்டோ அபெட்ஸ் ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் அங்கு விஜயம் செய்வான். இவனுக்கு, பாரீசில் ஜெர்மன் அரசாங்க தூதர் என்னும் பதவி வழங்கப்பட்டது. அவன் இன்னும் பாரிசில் தான் இருக்கிருன்.

"மாக்ஸிம்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற திருவிளையாடல்கள் பல. அங்கே வசித்து வந்த ஜெர்மன் இரகசியப் போலீசார் நன்ருகக் கொழுத்து வந்தது மட்டுமன்றி, பணக்காரர்களாகவும் ஆகிக் கொண்டிருந்தார்கள். இவர்களுக்குக் கையாளாக இருந்தது அந்த ஹோட்டலின் தலைமை வேலைக்காரி. பிரான்சின் எல்லையைக் கடந்து வெளியேறி விட விரும்புகிறவர்கள் அவள் மூலமாக ஜெர்மன் போலீசாருக்குப் பெருந் தொகைகளை இலஞ்சமாகக் கொடுத்து எல்லையைக் கடந்து போக அனுமதிச் சீட்டுப் பெற்று வந்தார்கள்.

சுமார் 6 மாதங்களுக்கு முன்பு தான் ஜெர்மன் இரகசியப் போலீசாரின் இந்தத் திருவிளையாடல்கள், ஜெர்மன் இராணுவ அதிகாரிகளுக்குத் தெரியவந்தன. ஜெர்மன் ரகசியப் போலீஸார் எந்த நாட்டிலிருந்தாலும் பலித்த வரையிலும் பறிக்கிறது தான் அவர்கள் வேலை. கொள்ளையடிப்பதும், பெண் சோரம் புரிவதும், இலஞ்சம் வாங்குவதும் தான் அவர்களுடைய வேதம்.

"ஜெர்மன் நீர் மூழ்கிகளால் - - - - - - - - நமக்குச் சேதமே கிடையாது"

விமான பலம் ஒரு வருஷத்தில் 3 மடங்கு உயர்ந்திருக்கிறது

மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் செய்த பிரசங்கம்

"பிரான்ஸில் உள்ள ஜெர்மனியர் மீதோ அல்லது நேரடியாக ஜெர்மனி மீதோ அல்லது அச்சு அடிமை நாடுகள் மீதோ தாக்குவதற்கு பதில், ஆப்ரிக்க போராட்டம் என்று நான் என்றும் நினைத்ததே கிடையாது" என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் யுத்தரங்க விமர்சனம் செய்யும் போது அறிவித்தார்.

இன்று சபையில் பெருங் கூட்டம் தூதர்கள் குடியேற்ற நாடுகளின் ஹை கமிஷனர்கள், முதலியோர் திரளாக வந்திருந்து பிரசங்கத்தைக் கேட்டார்கள்.

"செப்டெம்பர்மீ 18-ந் தேதியுடன் முடிவடையும் நான்கு மாத காலத்தில், வட அட்லாண்டிக்கில் எதிரி நடவடிக்கையின் விளைவாக வர்த்தகக் கப்பல் எதுவும் மூழ்கவில்லை. செப்டெம்பர் முதல் பட்சத்தில் உலகத்தின் எந்தப் பகுதிலும் ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் தாக்குதலால் நேசக் கப்பல் எதுவும் மூழ்கவில்லை.

நீர்மூழ்கிக்கப்பல்கள் இப்பொழுது மீண்டும் சுறுசுறுப்பாயிருக்கின்றன. இச்சமயத்தில் நேசக் கான்வாய் ஒன்று தாக்குதலுக் காளாகி வருகிறது.

இப்போதோ இனிமேலோ மீட்டுக் கொள்ள முடியாத அளவில் ஜப்பானுக்கு கப்பல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இது ஜப்பானுடைய விமானப் படைக்கும் பொருந்தும்.'

பிறகு இத்தாலிய சரண் பற்றி விவரமாக கூறிவிட்டு அவர் சொல்லியதாவது:—

"படோக்ளியோ அரசாங்கம் முஸோலினியைப் பிடித்து வைத்திருக்க ஜாக்கிரதையாக ஏற்பாடு செய்திருந்தார்கள்; ஆனால், ஆகாயத்திலிருந்து பாரசூட்டில் இறங்குவார்கள் என்று முன்கூட்டி பந்தோபஸ்து ஏற்பாடு செய்ய வில்லை. கராபினீரி துருப்புகளுக்கு முஸொலீனியை மீட்க யாரும் முயற்சித்தால் அவரைச் சுட்டுத் தள்ளும் படி உத்தரவு போடப் பட்டிருந்தது. ஆனால் அவர்கள் கடமையை செய்யத் தவறினார்கள்.

யுத்த ரங்கத்திலிருந்து நேற்று வந்த தகவல்கள்: எதிரி நிலைமை க்ஷீணமாகி, நமது சைன்யங்கள் விஸ்தாரமான முனையில், வடதிசை நோக்கி முன்னேற வசதி படைத்து விட்டன; அந்தக் காரியம் அபிவிருத்தி யடைந்து வருகிறது.

ஸார்டினியாவையும், கார்ஸீகாவையும் தாக்கி படைகளை இறக்க விஸ்தாரமான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

வெகு சீக்கிரத்தில் பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா ஆகியவற்றின் மகாநாடு நடைபெறும்.

கிழக்கு ஆசியப் படை அரங்க போர்க்கள ஸுப்ரீம் சேனாதிபதியாக அட்மிரல் மவுண்ட் பாட்டன் நியமிக்கப் பட்டிருக்கிறார். அவரும் அவரது ராணுவ பரிவாரமும் வெகு சீக்கிரத்தில் இந்தியாவுக்குச் செல்லும். ஜெனரல் ஐஸன்ஹவர் ஐரோப்பாவில் அமைந்துள்ள ரீதியில், அவர் அங்கு ராணுவக் காரியாலயம் அமைப்பார். இது புது டில்லியில் இந்தியா அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதற்குச் சவுகரியமாக அமைந்திருக்கும்.'

மிஸ்டர் சர்ச்சில்.

மிஸ்டர் சர்ச்சில் பேச்சின் விவரம்

ஸ்ரீ சர்ச்சில் காமன்ஸ் சபையில் 21-ம் தேதி காமன்ஸ் சபையில் செய்த பிரசங்கத்தின் சாரம் வருமாறு:

பொக்கிஷ மந்திரி சர் கிங்ஸ்லி வூட் அகால மரணத்துக்கு சுருக்கமாக அனுதாபம் கூறிவிட்டு இங்கிலீஷ் கால்வாய் மார்க்கமாக பிரான்ஸில் உள்ள ஜெர்மனியரையோ தாழ்ந்த வெளிப் பகுதிகளையோ தாக்கி படைகளை இறக்குவதற்கு ஈடானது, வட ஆப்ரிக்க நுழைவு எனத் தாம் நினைத்ததே கிடையாது என்றார்.

"மாஸ்கோவில் பிரதம மந்திரி மார்ஷல் ஸ்டாலின், ஜெர்மன் தாக்குதலைச் சமாளிக்க தமக்கு முடியும் என்று திடமாக என்னிடம் சொன்னார். ஸ்டாலின்கிராடை மீட்கவும் முடிந்தால், ஜெர்மன் சைனியத்தை அழித்து விடவும் தாம் வகுத்துள்ள எதிர் நடவடிக்கைகளை என்னிடம் முன்கூட்டி அறிவித்தார். சென்ற ஒரு வருஷத்துக்கு முன் ஏறக்குறைய இதே காலத்தில் செப்டெம்பர் மாதம் 23-ம் தேதி ஆரம்பமான கடுமையான போராட்டத்தில் ரோமெல் பின் வாங்கினார். அதன் பிறகு ஒரு மாதம் எல் அலாமீனில் கடும் போரிட்டு பாலைவனச் சேனை ஆரம்பித்த முன்னேற்றம், இன்னும் தடைப்படவில்லை.

அதன் பிறகு தாம் பிரஸிடென்ட் ரூஸ்வெல்டை சந்தித்தபோது கஸாபிளாங்காவில் ஆங்கிலோ அமெரிக்க ராணுவ சிப்பந்திகள் மந்திராலோசனை கூடியதையும் அதன் விளைவுகளையும் சர்ச்சில் விவரித்தார்.

"இந்த வருஷம் நிலப்போரில் வெற்றி கிடைத்து வருவதுடன் எதிரி நாடுகளின் மீது பிரிட்டிஷ் அமெரிக்க ரஷ்ய விமான ஆதிக்கம் விரைவாக மேலோங்கி வருகிறது."

பிரிட்டிஷ் விமான பலமும் குண்டு வீச்சு எடையும் சென்ற 12 மாதங்களில் மூன்று மடங்கு அதிகமாக இருக்கிறது. பிரிட்டன் சகல போர் முனைகளிலும் முன் வியுக விமானங்கள் ஜெர்மனியைவிட 50°/。 அதிகமாக வைத்திருக்கிறது. இந்த விமான பலக் கணக்கில் ரஷ்யா சேர்க்கப் படவில்லை.

ஆனால் நமது முயற்சியை எவ்விதத்திலும் தளர்த்தக் கூடாது. நாம் கடுமையாக தாக்கிவரும் பயங்கர எதிரி, பதிலுக்குத் தாக்க ஆவேசத்துடன் முயலுவது நிச்சயம்.

ஹிட்லர் முதல் ஜெர்மன் தலைவர்கள் யாவரும் புது முறைகள், புது ஆயுதங்கள் என்று பூடகமாக சொல்லி வருகிறார்கள்.

தம்முடைய ஜனங்களுக்கு ஊக்கமளிக்க இவ்வதந்திகளை விவரிப்பது அவர்களுக்கு அவசியமே.

இது வெற்று வார்த்தை என்று சொல்லிவிட முடியாது. நமது கப்பல்களை நெருங்கி எதிரிகள் புதுவிதமான வெடி குண்டுகளை உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள். இதை கிளைடர் வெடி குண்டு என்று சொல்லலாம். ராக்கெட் மாதிரி (அதாவது தன் பலத்தில் பாயும் வாணம் மாதிரி) போகிறது. இதை பெரிய விமானத்தில் வைத்து பறந்து பாய்ந்து நாசம் செய்ய உபயோகிக்கிறார்கள். புது முறைகளில் நமக்குச் சேதம் விளைவிக்கும் ஆயுதங்களை செய்ய ஜெர்மனியர் முயலக்கூடும். இவற்றை எல்லாம் வெகு ஜாக்கிரதையுடன் கவனிக்க முயன்று வருகிறோம்.

ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பற் போர்

நாளொன்றிற்கு சராசரி ஒரு ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பலை நாம் மூழ்கடித்திருக்கிறோம்; ஆனால் சென்ற சில மாதங்களாக நமது கப்பல்களில் ஒன்றைக் கூட ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்கள் மூழ்கடிக்க வில்லை.

இனி மேல் வரக்கூடிய நஷ்டங்களையும் சமாளிக்கக் கூடியபடி புது உற்பத்தி இந்த வருஷ ஆரம்பத்திலேயே தொடங்கிவிட்டது. இப்பொழுது 60 லக்ஷம் டன் அதிகம் உற்பத்தியாகிறது. ஐக்கிய நாடுகள் யாவும், யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து அனுபவித்த நஷ்டங்கள் எல்லாவற்றையும் ஈடு செய்து விட்டது.

பெரிய பெரிய கான்வாய்கள் மூலம் இத்தீவுகளுக்குத் தேவையான பொருள்களை முக்கியமாக எண்ணெயை கொண்டு வந்து விட்டோம்

கப்பல் கட்டும் துறைகளிலும், கடலிலும், நாம் கடமையினின்றும் வழுவி அட்லாண்டிக்கின் இரு கரையிலும் யந்திரத் தொழில் ஊழியர் குறைவுபட்டுப் போகுமானால், ஜெர்மன் நீர் மூழ்கிக் கப்பல்களினாலேயே நாம் தோற்கடிக்கப்படுவோம் எனவும் நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

ஜப்பான் பலம் ஓய்வு

க்யூபெக் மகா நாட்டில் ஜப்பான் மீது போர் தொடுப்பதுபற்றி கவனம் செலுத்தப்பட்டது. பஸிபிக்கின் பற்பல பகுதிகளில் ஏற்கெனவே பேரளவில்படை எடுப்பு ஆரம்பமாகிவிட்டது.

அமெரிக்க சைன்யத்தின் பெரும் பகுதி அந்தப் பகுதியில் ஆங்காங்கு நடவடிக்கை எடுத்து வருகின்றன. இந்த நடவடிக்கைகள் வருங்காலத்தில் பெரிதாக ஓங்கி வளரும் என்பதறகு பலத்த நம்பிக்கை உண்டு.

ஜப்பானுக்கு விரோதமாக நடைபெற்று வரும் போராட்டத்தில் முக்கியமான விஷயம் இதுதான். மேற்கொண்டுள்ள வேலைக்கு ஏறப தமக்கு ஏற்பட்டுவரும் கப்பல் நஷ்டத்தை ஜப்பானியருக்கு சமன் செய்து கொள்ள முடியாது. இந்த நஷ்டம் தெளிவாகத் தென்பட்டு வருகிறது. குறைந்த பட்ச கப்பல் சப்ளை இல்லாதவரை, பிடித்துள்ள விஸ்தாரமான பிரதேசங்களை கைக்குள் வைத்திருக்க முடியாது. சமன் செய்து கொள்ள முடியாத ரீதியில் அவர்கள் கப்பல் நஷ்ட மிருந்து வருகிறது. அவர்களுடைய விமான பலமும் அப்படிப் பட்டதே.

பிறகு தென் கிழக்கு ஆசிய போர்த் தலைமை ஸ்தாபனத்தைப் பற்றிக் குறிப்பிட்டு சார்சில் பேசியதாவது : நேச ஸுப்ரீம் கமாண்டராக அட்மிரல் மவுண்ட் பாட்டன் இந்தியாவுக்கு வெகு சீக்கிரத்தில் தம் ராணுவ பரிவாரத்துடன் செல்லுவார். இந்த மாதிரியான கூட்டு சேனாதிபத்தியம் மிகவும் அவசியமாகும். காரணம் அங்கு அமெரிக்கா ஸ்தாபித்துள்ள பல யுத்த காரியாலயங்கள் தான். சீனாவுக்கு விமானப் பாதை அமைப்பது போன்ற பல காரியங்களைச் செய்து வருகிறது.

இந்த ராணுவக் காரியாலயம் புது டில்லியில் இந்திய அரசாங்கத்தார் அருகே அமைக்கப்படும். ஆரம்ப காலத்தில் இந்திய பிரதம சேனாதிபதியான ஜெனரல் ஆக்கின்லெக்குடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

முஸோலினி வீழ்ச்சி

பிறகு முஸோலினி வீழ்ச்சி பற்றியும் மத்தியதரைக் கடல் போர் ரங்கத்தையும் பற்றி சர்ச்சில் விவரிக்கையில் கூறியதாவது :

ஆகஸ்ட்டு 23-ந் தேதி இத்தாலிய ஜெனரல் ஒருவர் படோக்ளியோ கோரிய நிபந்தனைகளைப் பெற்று ஆகஸ்ட்டு 31-ந் தேதி பதில் கொண்டு வருவதாகச் சென்றார்.

அதற்கிடையில் இரண்டு வருஷங்களுக்கு முன் மத்யதரைக் கடலில் சிறை பிடித்த ஜெனரல் கார்டன் டிவயார்ட் என்ற நமது ராணுவ உத்யோகஸ்தர் வந்தார். அவர் வந்த காரியம் பலிக்கவில்லை. உடனே தாம் மறுபடியும் இத்தாலியரிடம் சிறைக்கு வந்துவிடுவதாக அறிவித்தார். ஆனால் இத்தாலிய உத்யோகஸ்தர் அதை மறுத்துவிட, அவர் இன்று இங்கு சுதந்திரத்துடனிருந்து வருகிறார்.

ஆகஸ்ட்டு 31-ந் தேதி தூதர் திரும்ப, அவரும் ஜெனரல் ஐஸன்ஹவரும் ஸைரக்யூஸில் சந்தித்து நிபந்தனைகளை முடிவு கட்டிக் கொண்டார்கள். இத்தாலியில் திரண்டுள்ள ஜெர்மன் சைன்யங்களை எப்படி விரட்டுவது என்று இத்தாலிய அரசாங்கம் மலைத்தது. ஆகையால் ஜெர்மன் பிடிப்பிலிருந்து திமிரிக் கொள்ள போர்ச் சந்தர்ப்பம் எது என்று நாங்கள் நினைத்தோமோ அப்பொழுது சரணாகதிகள் பிரகடனப் படுத்த உத்தேசித்தோம்.

ரோமை மீட்க விமான உதவி

யுத்த நிறுத்தப் பிரகடனத்தை அறிவிக்கும் அதே சமயத்தில், ரோம் நகரில் நிற்கும் இரண்டு டிவிஷன்களை விரட்டியடிக்க அமெரிக்க விமான டிவிஷன் ஒன்றை அனுப்புவதாகச் சொன்னோம். யுத்த நிறுத்தம் அறிவிக்கப் படுவதற்கு இரண்டொரு நாட்களுக்கு முன், ரோம் நகரிலுள்ள விமான மைதானங்களில் எல்லாம் ஜெர்மன் துருப்புகள் போய் நின்று கொள்ள இத்தாலிய சர்க்கார் எங்களுக்கு எச்சரிக்கை கொடுத்தது. ஆகையால் தான், இந்த சாகசத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. திட்டம் வெகு திரம் மிகுந்தது என்றே நான் கருதுகிறேன்.

" ரோம் நகரில் நிலைமை எப்படி என்று தெரிந்து கொள்ளாதபடி, இந்த பலம் மிகுந்த சேனையை அங்கு கொண்டு தள்ளி இருந்தால், அடியோடு அழிந்திருக்கக் கூடும். நாங்கள் அதற்கும் தயாராக இருந்தோம் ; ஆனால் கடைசி நிமிஷத்தில் " விமான மைதானங்கள் எல்லாம் எங்கள் வசமில்லை " என்று எச்சரிக்கை வந்தது.

முஸோலினி மீட்சி

பிறகு முஸோலினி மீட்கப்பட்டதை மிஸ்டர் சர்ச்சில் வர்ணித்தார்.

" யுத்த நிறுத்தத்துக்கும், நமது படை பிரவேசத்துக்கும் முன்பாக முஸோலினியை தனியாகவும், விசேஷமாகவும் ஒப்படைப்பது சாத்தியமில்லாது போயிறறு. ஏனென்றால் அன்றுடம் ஜெர்மன் சிப்பந்திகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் இத்தாலிய அரசாங்கத்திற்கு சந்தேகம் ஏற்படாமல் நடந்து கொள்ளுவது சாத்தியமல்ல. கழுத்துக்குப் பின்னால் கெஸ்டபோ துப்பாக்கி நீட்டிக் கொண்டிருக்கும் போது, நிலைமை சங்கடமே. (சிரிப்பு.)

படோக்ளியோ அரசாங்கம் முஸோலினியை பலத்த பந்தோபஸ்தில் தான் வைத்திருந்தது. ஆனால் பாரசூட் படைகள் அவ்வளவு ஏராளமாக அவ்விடத்தில் இறங்கும் என்று எதிர்ப்பார்க்கவில்லை. காவல் செய்த காரபினீரி படைகளுக்கு முஸோலீனியை மீட்க் முயன்றால் சுட்டுத் தள்ளிவிட வேண்டும் என்று உத்தரவு. ஆகாயத்திலிருந்து இறங்கிய ஏராளமான ஜெர்மன் துருப்புகள், முஸோலீனி சவுக்கியத்துக்கு ஜவாப்தாரி அவர்களே என்று கணக்குத் தீர்க்கக் கூடுமாகையால் அவர்கள் பேசாதிருக்க வேண்டியதாயிற்று அதற்கு அவ்வளவு போதும். (சிரிப்பு.)

இத்தாலியர் ஏகாதிபத்தியத்தை இழந்தார்கள்.

ரஷ்யா யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பரிசீலனை செய்து ஜெனரல் ஐஸன்ஹவர், அமெரிக்கா பிரிட்டன் சார்பாக கையெழுத்திடுவதுடன், ரஷ்யா, ஐக்கிய நாடுகள் சார்பாகவும் கையெழுத்திடலாம் என்று அதிகாரம் தந்தபின்பே உடன்படிக்கை நிறைவேறியது. இத்தாலியர் தம் ஏகாதிபத்தியத்தை மீளா வகையில் இழந்துவிட்டார்கள்.

இனிமேல் இத்தாலியருடைய அழகான பூமி ஜெர்மன் பின்னணிப் படையின் ரணகளமாகும். ஹிட்லரின் கோபாவேசமும் குரோதமும் கொடுமையைத் தீட்டும் என்பதில் ஐயமில்லை. இத்தாலிய மக்கள் அடிமைத் தனத்தினின்று மீட்கப்படுவார்கள். வருங்கால சுதந்திர ஜனநாயக நாடுகளிடை தம்முடைய உரிய ஸ்தானத்தை வகிப்பார்கள். நமது துன்பங்களுக்கெல்லாம் ஆதார வேர்களான நாஜீயக் கொடுங்கோன்மையும் பிரஷ்ய போர்க்குணமும் சுட்டெரிக்கப்படவேண்டும். அதை அடையும் வரை நாம் செய்யாத நியாயங்கள் இருக்காது. நாம் மேற்கொள்ளாத ஹிம்சை முறை இருக்காது.

இத்தாலியிலே கொடுஞ்சண்டை கொதித்துக்கொண்டிருக்கும் நேரத்தில், இத்தாலிய யுத்த நிறுத்த ஒப்பந்தம் பிரகடனம் செய்யப்பட்டது. படோக்ளியோ அரசாங்கத்தார் நிபந்தனைகளை நிறைவேற்றும்படி இத்தாலிய துருப்புகளுக்குக் கட்டளையிட்டது.

ரோம் நகருக்கு வெளியிலிருந்த ஜெர்மன் பான்ஸர் டிவிஷன் நகருக்குள் புகுந்து மன்னரையும் அவரது அரசாங்கத்தையும் விரட்டியது. அவர்கள் இப்போது நமது அணிகளுக்குப் பின்புறம் க்ஷேமமாக இருக்கிறார்கள்.

ஸார்டினியாவிலிருந்த நான்கு இத்தாலிய டிவிஷன்கள் ஜெர்மன் டிவிஷன்களை விரட்டின. அமெரிக்கர் இப்பொழுது அவர்களுக்குத் துணையாக இறங்கிவிட்டார்கள். கார்ஸிகாவில் பிரெஞ்சுக்காரர் இறங்கிவிட்டார்கள். இப்போது தான் முதன் முதலாக பிரெஞ்சுக்காரர் தம் தாய் நாட்டின் விடுதலைக்காக போரில் புகுந்துள்ளார்கள். சக்தி வாய்ந்த பிரெஞ்சு ராணுவம் உருவாகி வருகிறது. அது பேரளவில் சேவை செய்யும் என்பதில் ஐயமில்லை.

தப்பி ஓடிய முஸோலினி, ஜெர்மன் கத்தி முனையில், ஒரு போலி அரசாங்கத்தை ஏற்படுத்தி இத்தாலிய மக்கள் கழுத்தில் பாஸிஸ்ட் நுகத்தடியை மாட்ட முயலுவதால் இத்தாலியில் உள்நாட்டு யுத்தத்தை ஆரம்பிக்கும்.

இத்தாலியில் ஏராளமான சேனைகளை அனுப்பி, எதிரி வருக்கும் சாகசங்களுக்கு எல்லாம் ஈடுகொடுத்து அவசியமானால் இலையுதிர்-உறை பனிக்காலம் வரை போரிட நாம் தயார்.

முதலில் நாம் ஆப்ரிக்காவிலும் பிறகு ஸிஸிலியிலும், மூன்றாவது இத்தாலியிலும் படை முனை வகுத்திருக்கிறோம். 2-வது போர்முனை இருக்கத் தான் செய்கிறது. அது வெகு வேகமாகப் பலம் பெற்று வருகிறது. இன்னும் போரில் புகவில்லை. எது சரியான காலம் என நமது அமெரிக்க சகாக்களும் நாமும் தீர்மானிக்கிறோமோ, அப்பொழுது, இந்த முனை ஆரம்பமாகும் ; தெற்கிலுள்ள படை எடுப்புடன் மேற்கிலிருந்து விஸ்தாரமான ரீதியில் படைப் பிரவேசம் உருவாகும்.

2-வது போர்முனையா ?

இயற்கையாக ஆனால் விஷய பரிச்சயமில்லாததனால் விளையக்கூடிய கிளர்ச்சியினாலோ, நன் நோக்கத்துடன் எழுந்த வற்புறுத்தலினாலோ இந்த அரசாங்கம் இணங்கிவிடாது என்பதை இந்தச் சபை பூர்ணமாகத் தெரிந்து கொள்ளுக.

ராஜீய ரீதியில் ஏகக் கருத்தைக் காண்பித்துக் கொள்ளுவதற்காகவோ, "பலே" பட்டம் வாங்குவதற்காகவோ இந்த அரசாங்கம் தமது தீர்க்கமான முடிவுக்கு எதிராக பிறருடைய பலவந்தத்துக்கோ அல்லது கெஞ்சுதலுக்கோ இணங்கி பிரம்மாண்டமான போர் நடவடிக்கைகளில் இறங்கவே இறங்காது.

பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் ரணகளமான போர் ரங்கம் இனிமேல்தான் வரப்போகிறது. இச்சபையோ மன்னர் அரசாங்கமோ அந்த அக்னிப் பரீட்சையிலிருந்து பின்வாங்காது பொது லக்ஷியத்துக்கான தியாகங்களில் கருமித்தனம் காட்டமாட்டோம். நம் வசமுள்ள தீர்க்கமான ஆலோசனைகளின் விளைவாக உருவாகும் நிச்சய நம்பிக்கையின் பேரிலேயே நான் வேலை செய்வேன். ஆகையால் எப்பொழுது எங்கே எந்த அளவில் மேற்கிலிருந்து உருவாகும் பிரதான தாக்குதல் உருவாகும் என்ற விவகாரத்தைப்பற்றி, நான் விவாதிக்கப் போவதில்லை, சர்க்காரின் இந்தக் கருத்தை சபை ஆதரிக்கும் என நான் நிச்சயமாக நம்புகிறேன்.?

மத்யதரைக் கடல் நடவடிக்கைகளில் ரஷ்யர் காட்டிவரும் சிரத்தை பாராட்டத் தக்கதே. ஆனால் அதில் ஈடுபட்டுள்ள அரசாங்கத்தின் அதிகாரத்தை மீறவோ அல்லது பொறுப்புகளை குறைவுபடுத்தவோ அந்தக் கமிஷனுக்கு அதிகாரமில்லை.

மூவர் மகாநாடு.

இந்த வருஷம் முடியு முன் நானும் ரூஸ்வெல்டும், ஸ்டாலினும் சந்திப்போம், மந்திராலோசனை மகாநாடு முடிவடைந்த பிற்பாடுதான் எப்போது எங்கே நடைபெற்றது என்ற விவரம் வெளியிடப்படும்.

மூன்று அரசாங்கங்களின் தலைவர்களும் நெருங்கி ஒத்துழைத்து வருவதே, வருங்கால உலகத்துக்கு நலம் பயப்பதாகும். ரஷ்யாவுக்கும் இதர பெரிய நேச நாடுகளுக்கும் நெருங்கிய உறவு இல்லாவிட்டால், யுத்தம் குழப்பத்தில் போய் முடியும்.

க்யூபெக்கில் பிரெஞ்சு விடுதலைக் கமிட்டி அங்கீகரிக்கப்பட்டதைக் குறிப்பிட்டுவிட்டு, சந்தர்ப்ப நிலைமைகளுக்காக தலை வணங்கியும், பேராசையால் எதிரியின் வெற்றிக்கு சாதகம் பண்ணினவர்களுக்கும் சரியான தண்டனை கொடுக்கப்படும் என்றார்.

பிறகு இத்தாலியர் வசம் யுத்தக் கைதிகளாகவுள்ள 70,000 பேரும், கிரேக்க, யுகோ கைதிகள் 20,000 பேரும் உடனே மீட்கப்படவேண்டும் என விதிக்கப்பட்டதை அறிவித்தார்.

தெற்கு இத்தாலியில் ஆதிக்கம் கிடைத்து விட்டால், அட்ரியாடிக்குக் என தனி கமான்ட் ஏற்படுத்துவது சாத்தியம் என்று எதிர்பார்ப்பதாக அறிவித்தார்.

"இத்தாலி சரண் அடைந்துவிட்டது என்பதற்கு அதன் கடற்படை நம் கை வசமானதே தக்க அத்தாட்சி. நான் அமெரிக்காவி லிருக்கும் போது பிரிட்டன் மீதும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய மீதும் இதற்கு முன் நான் கண்டிராத அளவு நட்பு வளர்ந்து வருவதைப் பார்த்தேன்.

"முசோலினியின் முயற்சிக - - - - - - - - ளெல்லாம் படுதோல்வி"

"ஜெர்மன் ஜப்பான் கொள்ளைக் கூட்டங்களை வேரறுக்க வேண்டும்"

அமெரிக்க அரசாங்க சபைக்கு ரூஸ்வெல்ட் செய்தி

மிஸ்டர் ரூஸ்வெல்ட்.

சென்ற 17-ம் தேதி வெள்ளிக்கிழமை அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட், அமெரிக்க அரசாங்க சபைக்குக் கீழ்கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறார் :—

"அரசாங்க சபை கலைந்து 2 மாதங்கள் ஆகிவிட்டன. அதற்கிடையில் போர்முனைகளிலும் உள் நாட்டிலும் பல சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் நடைபெறும் பெரிய யுத்தங்கள் இணைக்கப் படக்கூடிய சமயத்தில், நீங்கள் கூடுகிறீர்கள்."

"சென்ற சில மாதங்களாக யுத்தத்தின் போக்கு நமக்குச் சாதகமாகவேயிருந்து வருகிறது. இந்தச் சாதகமான போக்கை யொட்டியே போய்க் கொண்டிருப்பதோடு நாம் திருப்தி யடைய முடியாது. சென்ற சில நாட்களாகக் கிடைக்கும் தகவல்களிலிருந்து இந்தப் போராட்டத்தினால், நியாயமாகவே நம் படைகளுக்கு ஆபத்து நேரக்கூடுமென்று நமக்குத் தெரியும். அன்றியும் நம் திட்டங்கள் அவ்வப்போது தடைப்படுகின்றன. இந்தத் தடைகளினால் நமது படைகளுக்கும் பொருட்களுக்கும் கடுமையான நஷ்டமுண்டாகின்றன."

"நேப்பில்ஸ் நகரத்திற்குத் தெற்கே நேசநாட்டுப் படைகள் மகா கடுமையாகப் போராடிக்கொண்டிருக்கின்றன. அங்கே அநேகர் மடிந்தனர்; பலர் காயப்பட்டனர். ஜெர்மன் படைகள் தம் மூச்சைப் பிடித்துக்கொண்டு மகா உக்கிரமாகப் போராடுகிறார்கள். இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. இத்தாலியை நாம் கைப்பற்றிவிட்டால், அவர்களுக்கு எவ்வளவு ஆபத்திற்கிடமுண்டு என்பதை அவர்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்களென்பது வெளியாகிறது."

அதிகம் படைகளை இறக்கத் திட்டம்

"இத்தாலியில் மட்டுமன்றி மற்ற இடங்களிலும் நம் படைகளை இறக்குவதென்று திட்டமிட்டிருக்கிறோம். இது பற்றி, அமெரிக்க அரசாங்க சபைக்கும் அமெரிக்க மக்களுக்கும் நான் உறுதி கூறுகிறேன். இந்தத் திட்டம் காசப்ளாங்காவில் வகுக்கப்பட்டது. பிரிட்டிஷ் அமெரிக்கத் தலைவர்களும், இந்த இரண்டு நாடுகளின் இராணுவத் தலைவர்களும் க்யுபெக்கில் கூடினோம். ஜெர்மனியையும் ஜப்பானையும் தகுந்தபடி மடக்கி யடிக்கிறதற்கு தெளிவான திட்டமெல்லாம் அங்கே வகுத்தோம். ஐரோப்பாவிலும் மற்ற இடங்களிலும், எங்கெங்கே எத்தனைமுறை நம் படைகளைக் கொண்டுபோய் எவ்வெப்போது இறக்கவேண்டு மென்று நிர்ணயித்தோம்."

"சென்ற ஜூலை மாதம் 3-ம் தேதி வெகு எச்சரிக்கையோடு தயாரிக்கப்பட்டதோர் படை சிசிலியில் இறங்கியது. அங்கே ஜெர்மானியர்களின் எதிர்ப்பு மகா கடுமையாயிருந்தது. அன்றியும் இத்தீவு ஜெர்மானியர்களால் நன்கு அரண் செய்யப்பட்டிருந்தது. என்றாலும், இவ்வளவு பெரிய தீவை விட்டு எதிரிகளை நம் நேசநாட்டுப் படைகள் 38 நாட்களில் விரட்டிவிட்டன. இந்த சிசிலிப் போராட்டத்தில் பிரிட்டிஷ் படையிலும், கனடியப் படையிலும், அமெரிக்கப் படையிலும் மடிந்தவர்களும் காயம் பட்டவர்களும், காணாமற் போனவர்களும் மொத்தம் 31,158 பேர்கள். இவர்களுள் அமெரிக்கப் படையினருக்கு ஏற்பட்ட மொத்தச் சேதம் 7,445 மட்டுந் தான். இத்தாலியர்களுக்கும் ஜெர்மானியர்களுக்கும் நேர்ந்த மொத்தச் சேதம் 1,65,000 பேர்கள். இவர்களில் யுத்தக் கைதிகளானவர்கள் 13,200 பேர்கள்."

"அங்கிருந்த இத்தாலிய மக்கள், நேசநாட்டுப் படைகளை முழு மனதோடு வரவேற்று உபசரித்தனர். இந்தத் தீவு ஏறக்குறைய ஒரு தலைமுறைக் காலமாக சர்வாதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது. அதுவும் பரிபூரண சர்வாதிகாரம். அதற்காதரவாக எத்தனை வகைப் பிரசாரங்கள்! தணிக்கைகள்! அங்கே பேச்சுச் சுதந்திரம் நசுக்கப்பட்டிருந்தது. எந்த விஷயத்தை குறித்தும் யாரும் விவாதிக்கக் கூடாது. இவ்வளவு நிர்பந்தங்களுக் கிடையே சென்ற ஒரு தலைமுறையாக மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தும் கூட, அவர்களுக்கிருந்த விடுதலை யுணர்ச்சி கட்டுக் கடங்காததாயிருந்தது."

"அன்றியும் இத்தாலிய மக்கள் தம் சொந்த விருப்பத்தினால் இந்தப் போராட்டத்தில் இறங்கவில்லை என்று தெளிவாகத் தெரிந்தது. முசோலினி என்னதான் பிரசாரம் செய்தும், இத்தாலிய மக்கள் ஹிட்லரை வெறுத்தனர். நேசநாட்டினரை நேசித்தனர். முசோலினி மீது அவர்கள் கொண்டிருந்த ஆத்திரத்தைக் குறித்து கூறுதிருப்பதே நல்லது. அன்றியும் இப்போது ஜெர்மனியின் வயப்பட்டிருக்கும் நாடுகளில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டு வரும் நாஜிக் கையாட்களை பலவந்தமாக நீக்கினாலும், போராடி ஒழித்தாலும், அந்நாடுகளிலுள்ள மக்களும் இது போலவே பெரு மகிழ்ச்சியும் ஊக்கமும் கொள்ளுவார்கள்.

சிசிலியைத் தாக்கப் போனவை நேசநாட்டுப் படைகள். சிசிலியை காக்கப்போனவை ஜெர்மன் படைகள். இந்த இருவகைப் படைகளின் போக்கில் எவ்வளவு வேற்றுமை பார்த்தீர்களா? ஜெர்மன் படைகள் சிசிலி மக்கள் வைத்திருந்த எல்லாப் பொருட்களையும் சூறையாடிக் கொண்டு போய் வட இத்தாலியிலுள்ள தம் தலைவர்களிடம் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டன.

இத்தாலியப் படையெடுப்பும் அதற்குப் பிறகும்

நாஜிகளும் பாசிஸ்ட்களும் எந்த நாட்டைக் கைப்பற்றினாலும், அதன் உயிரை மட்டும் வைத்துவிட்டு ஊனை உறிஞ்சிவிடுவது வழக்கம், அது போலவேதான் சிசிலியிலும் செய்தார்கள்.

விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்த தானியத்தில் ஒரு மிகச் சிறிய பகுதியை மட்டுந்தான் தமக்கும் தம் குடும்பத்தாருக்கும் உணவுக் கென்று ஒதுக்கிக் கொள்ளலாம்."

"சிசிலிக்குப் போய் இறங்கிய படைகளோடு, நன்கு திட்டமிட்டு அமைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனமும் கூடவே போய் இறங்கினது. இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள், அத்தீவு வாசிகளுக்குப் பாதுகாப்பளிப்பதற்கு நல்ல தேர்ச்சி பெற்றவர்கள். இவர்கள் அத்தீவு வாசிகளுக்கு உணவு, உடை, மருந்துகள் முதலியவற்றை உதவினார்கள். பல ஆண்டுகளாக அவர்கள் இழந்திருந்த யதேச்சையை மீண்டும் அவர்கள் பெறுவதற்கு இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் முயற்சிக்கிறார்கள். இன்னும் ஒரு வருஷத்திற்குள்ளாக, தானாகவே, தன் நிர்வாகத்தைப் பிறர் உதவியின்றி நடத்திக்கொள்ளக் கூடியபடியும், தன் மதிப்போடு வாழத்தக்கபடியும் சிசிலியின் நிலைமை மாறிவிடும் என்பது பற்றி எனக்குப் பூரணமான நம்பிக்கை யுண்டு."

"நேச நாட்டுப் படைகள் சிசிலியிலிருந்து இத்தாலிக்கு முன்னேறிப் போயின. செப்டெம்பர் 3-ம் தேதி இத்தாலியின் தென்கோடிப் பகுதிக்குப் போய்ச் சேர்ந்தன. வெல்லப்பட்டு கொடுமைகளுக்கு ஆளாகியிருக்கும் ஐரோப்பிய நாடுகளை மீட்கும் பொருட்டு, ஐரோப்பாவில் முதன் முதல் போய் இறங்கிய படை இதுதான். இந்த நாடுகளில் மட்டுமன்றி, உலகிலுள்ள மற்றெல்லா நாடுகளிலும் உள்ள எதேச்சையை நாடும் மக்களின் கோரிக்கைகள் நிறைவேறுவதற்கு, அன்றுதான் ஆரம்பம் என்று சரித்திரக்காரர்கள் எழுதுவார்கள்."

"நாம் சிசிலியில் போய் இறங்கி இரண்டு வாரங்களுக்குப் பிறகு, அதாவது, ஜூலை மாதம் 25-ம் தேதி, இத்தாலியில் நடைபெற்ற அரசியல் சம்பவங்கள் உலகத்தையே திடுக்கிடச் செய்துவிட்டன. சற்றேறக்குறைய ஒரு தலை முறையாக முசோலினி செய்துவந்த காரியங்களெல்லாம் தலை மறைவாகவே செய்து வந்தான். இத்தாலி பட்ட துன்பங்களுக் கெல்லாம் இவன் தான் பொறுப்பாளி. இந்த விஷயத்தில் ஹிட்லரும் இவனோடு கூட்டுப் பொறுப்பாளி. முசோலினி செய்த முயற்சிகளிலெல்லாம் படுதோல்வி யடைந்தன. வேண்டுமென்றே மிருகத் தனமாகப் பொது மக்களிடம் நடந்துகொண்டான். இதன் பயனாக, அவனைப் பதவியினின்று நீக்கவேண்டு மென்றும் அவன் ஆதிக்கம் அழியவேண்டு மென்றும் இத்தாலிய மக்கள் கோரினார்கள். அவர்கள் கோரிக்கைப்படியே நடந்தது. அச்சு அரசாங்கத் தலைமை முதன் முதல் அப்போதுதான் முறிந்தது. இதுபோலவே மற்ற அச்சு அரசியல் தலைவர்களும் மண்ணைக் கவ்வுவார்கள் என்னும் உறுதி நமக்குண்டு."

இராணுவக்காரர்களுக்கு இடமில்லை

"ஒரு விஷயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஹிட்லரும் நாஜிகளும் வெளியேறுகிறபோது, அவர்களைச் சேர்ந்த இராணுவத்தார்களும் வெளியேறிவிட வேண்டியதுதான். எதிர்கால உலகில் நிரந்தரமான சமாதானம் நிலைத்திருக்க வேண்டுமானால், யுத்தத்திற்கு விதை விதைத்துக்கொண்டிருக்கும் ஜெர்மன் ஜப்பான் இராணுவக் கொள்ளைக் கூட்டங்களை வேரறுக்கவேண்டும். சென்றமாத ஆரம்பத்தில் ஏராளமான நேச நாட்டுப் படைகள், குறிப்பாக விமானப் படையும் கடற்படையும் போய் இத்தாலியில் இறங்கின. இவற்றைக் கண்ட இத்தாலியர்கள் தாம் இனிப் போராட்டத்தில் கலந்து கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டதெனத் தெளிவாகத் தெரிந்துகொண்டனர். பிறகு நம்மோடு சமரசம் பேச ஆரம்பித்தார்கள். இது மகா இரகசியமாக நடந்தது. அதனால் தான் இதுபற்றி அரசாங்க சபைக்கோ, பத்திரிகைகளுக்கோ, ஒன்றும் நாம் தெரிவிக்கவில்லை. இத்தாலியில் நாம் நடந்து கொண்ட முறையைக் கண்டித்தவர்களுக்குச் சமாதானம் கூறும் முறையில் கூட; நான் எதுவும் கூறவில்லை. இந்த சமரசப் பேச்சு, பிறகு அச்சுநாட்டாருக்கு மட்டுமன்றி, இத்தாலிய மக்களுக்கே மிகுந்த ஆச்சரியத்தை விளைத்தது. ஒவ்வொருவரும் மிகுந்த ஆச்சரிய மடைந்தார்கள்."

"இந்த யுத்தத்தில் பல நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன; இன்னும் பல நிலைமைகள் ஏற்படலாம். அவைபற்றி நான் எந்தவிதமான அறிக்கையையும் வெளியிடமுடியாது; நாம் எந்தக் கொள்கையைக் கையாளப் போகிறோமென்று தெரிவிக்கக் கூடாது. இந்த நிலைமையை அரசாங்க சபையினர் நன்கு உணர்ந்திருக்கிறார்களென்று நினைக்கிறேன். நானும் நம் படைத்தலைவர்களும் செய்யும் காரியங்களை அமெரிக்க மக்களும் அரசாங்க சபையினரும் ஆமோதிக்க வேண்டுமென்று கோருகிறேன். எல்லா உண்மை விவரங்களையும் அறியாமல் எம்மீது குறைகூறி வீணாகவும் அநியாயமாகவும் தாக்குகிற போது, நாம் வாயை மூடிக்கொண்டு சும்மாயிருப்பது கஷ்டமாயிருக்கிறது. பொது மக்களுக்கும் அரசாங்க சபைக்கும் நான் ஒரு வாக்குறுதி கொடுக்கிறேன். நாம் மேற் கொள்ளும் கொள்கை, நம் பரம்பரையான அடிப்படையான ஜனநாயகந் தான்; இந்தக் குடியரசின் லட்சியம் இதுதான். இதுதான் நம் கொள்கை. பாசிசத்தின் ஒரு சிறு துளி அம்சமாவது உலகத்தின் எந்தப் பகுதியிலாவது இருக்கும்படி விட்டுவிட்டோமானால், நாம் பரிபூரண வெற்றியடைந்தோ மென்று சொல்லிக் கொள்ளவே முடியாது. செப்டெம்பர் மாதம் 3-ம் தேதி சிசிலி தீவில் இத்தாலியர்கள் சமரச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். என்றாலும், நேபில்ஸ் பகுதியில் நாம் போய் இறங்குவதற்கு ஆயத்தமாயிருக்கும் வரையில், அதாவது செப்டெம்பர் மாதம் 8-ம் தேதி வரையில், இச் செய்தியை இரகசியமாகவே வைத்திருந்தோம்.

"நேபில்ஸ் பகுதியில் போய் நம் படைகள் இறங்கவேண்டு மென்பது பற்றி, நாம் ஏற்கெனவே திட்டமிட்டிருந்தோம். சமரச ஒப்பந்தம் கையெழுத்தானாலும், ஆகாவிட்டாலும் இதை நிறைவேற்றுவ தென்று முடிவு செய்துவிட்டோம். நம்மை எதிர்த்தும் போராடவேண்டாமென்று இத்தாலியத் தலைவர்கள் தம் படைகளைக் கேட்டுக் கொண்டனர். இத்தாலியப் படையினர் நன்கு அமைக்கப்படவில்லை; அவர்களுக்குப் போதுமான 'சப்ளை'களும் கிடையாது. என்றாலும் பல பகுதிகளில் அவர்கள் ஜெர்மன் படைகளோடு போராடினர். இத்தாலியர்கள் எந்த வித நிபந்தனையுமின்றி நம்மிடம் சரணாகதியடைந்தனர். ஆகவே, இத்தாலியக் கப்பற்படை நம் பக்கம் வந்து சேர்ந்துவிட்டது. இது, தன் நாஜி எதிரிகளை எதிர்த்து நின்று போராடும் மகத்தான பலமாக நமக்கு உதவும்."

ஹிட்லருடைய கோட்டைகளுக்குக் கூரையில்லை.

"தான் தாக்கக்கூடிய நிலைமை மாறி, தற்காத்துக் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டதென்று ஹிட்லர் தெரிந்து கொண்டார். உடனே தன் வீண்டம்பப் பிரசாரத்தை வீச ஆரம்பித்தார். ஈ, எறும்பு கூட உட்புக முடியாத ஒரு பெருங் கோட்டையாக ஐரோப்பாவைத் தான் ஆக்கி வைத்திருப்பதாக வீண் பெருமை பேசினார். ஆனால், அந்தக் கோட்டைக்குக் கூரை வேய மறந்துவிட்டார். அந்தக் கோட்டையின் பல பகுதிகள் ஊடுருவிச் செல்லத் தக்கனவா யிருக்கின்றன. அந்தப் பகுதிகள் எவை என்று நாம் நாளடைவில் தெரிவிப்போம்."

"பிரிட்டிஷ்-அமெரிக்க விமானப் படைகள் இந்தக் கூரையில்லாக் கோட்டையை மேலும் மேலும் கடுமையாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றன. ஜெர்மனியின் தெற்குப் பகுதியையும் கிழக்குப் பகுதியையும் விமானங்களிலிருந்து தாக்கத் தக்கபடி அதற்கருகில் சில விமான தளங்களை யமைக்க வேண்டு மென்பது நமது நோக்கம். அப்போது தான், ஜெர்மனியின் மேற்குப் பகுதியில் இரவும் பகலும் தாக்கிக் கொண்டிருப்பதைப் போல தெற்குப் பகுதியிலும், கிழக்குப் பகுதியிலும் தாக்கி நாசஞ் செய்ய முடியும். 1940-41-ம் வருஷங்களில் பிரிட்டனை ஜெர்மானியர்கள் மகா உக்கிரமாகத் தாக்கினார்கள். அப்போது அதைச் சமாளித்துக் கொள்ளத் தக்க திறமை பிரிட்டிஷ் பொது மக்களுக்கும், பிரிட்டிஷ் மன்னருக்கும், முதல் மந்திரிக்கும் உண்டு என்பதை மெய்ப்பித்துவிட்டனர். அந்தச் சமயத்திலுங்கூட, பிரிட்டிஷ் விமானப் படையும் நமது விமானப் படையும் சும்மா யிருக்க வில்லை.

அப்போது நாஜியான கோயரிங்கும் அவருடைய கூட்டாளிகளான கொடியவர்களும் எந்தெந்த வகைகளில் தவறுகள் செய்கிறார்கள் என்று கவனித்து ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். இப்போது நாமும் பிரிட்டிஷாரும் அந்தக் குற்றங்களைச் செய்வதில்லை. நாஜிகளைப் போல், பொது ஜனங்கள் வசிக்கும் பகுதிகளை வெடி குண்டுகளெறிந்து தாக்குவதில்லை. தொழிற்சாலைகள், கப்பல் தளங்கள், வெடி மருந்து சாலைகள், போக்கு வரவு வசதிகள் முதலிய கேந்திர ஸ்தானங்களைத் தெளிவாகக் கண்டு பிடித்து அவற்றின் மேல் மட்டுந் தான் வெடிகுண்டுகளை எறிந்து நாசஞ் செய்கிறோம். இப்படிச் செய்வதனால், நாஜிகள் யுத்தத்தை மேலும் நடத்த முடியாததோர் நிலைமையை உண்டாக்குகிறோம். இந்த இராணுவ கேந்திர ஸ்தானங்களைத் தாக்கி அவற்றை சின்ன பின்னமாகச் சிதறடிக்கிறோம். என்றாலும், இன்னும் ஜெர்மனி நமக்குப் பெருந் தீங்கு செய்ய முடியும். அந்தக் கொடும் ஆதிக்கம் நாள்தோறும் அழிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. இது வரை இந்த உண்மையை ஹிட்லர் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால், அவருடைய குழம்பிய மனத்திலிருந்து, அவர் அறிவு அகன்றிருக்க வேண்டும். ஒரு விஷயத்தை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். பெருவாரியாக விமானத் தாக்குதல் நடத்துகிறபோது, பிரிட்டிஷ் அமெரிக்க விமானங்கள் பல சேத மடைகின்றன. இந்த நஷ்டத்தை நாம் விரைவில் ஈடு செய்து கொள்ள வேண்டும். அப்போது தான், எதிர் காலத்தில், நாம் வெடி குண்டுகளைக் கொண்டு தாக்கும் வேகம் தளர்ச்சி யடையாது."

"உண்மையிலேயே நமது உற்பத்தித்திட்டம் மிகவும் உயர்வாக இருக்க வேண்டி யிருக்கிறது. சில சமயங்களில் இந்த உற்பத்தியை விட அதிகமாகவும் நாம் உற்பத்தி செய்ய வேண்டி யிருக்கிறது. ருமேனியாவிலுள்ள போலஸ்டி எண்ணெய்க் கிணறுகளை நாம் வெகு கெட்டிக்காரத் தனமாகத் தாக்கினோம். அப்போது மிகப் பெரிய வெடி குண்டு விமானங்கள் 53 நமக்கு நஷ்டமாயின. 500 விமானிகள் காணமற் போயினர். இது ஒரு பெரும் நஷ்டமாகத் தான் தோன்றும். இவை எதிரியின் யுத்த முயற்சிகளுக்கு எவ்வளவு தூரம் சேத முண்டாக்கி யிருக்கின்றன வென்று ஒப்பிட்டுப் பார்த்தால், இது நமக்கு ஒரு பெரிய நஷ்டமல்ல. நாம் ஜெர்மனிக்கு உண்டாக்கியிருக்கிற அளவு நாசம் நமக்கு உண்டாக்கும் பொருட்டு, ஜெர்மன் படைத் தலைவர்களும் ஜப்பான் படைத் தலைவர்களும் லட்சக் கணக்கானவர்களைப் பலியிடத் தயங்கமாட்டார்கள். போலெஸ்டியைத் தாக்கிய, தலை சிறந்த வீர இளைஞர்களான அமெரிக்கர்கள், மிகச் சிறந்த வெற்றி பெற்றனர். இந்த வெற்றியின் பயனாக, யுத்தம் விரைவில் முடிவடைந்து கணக்கற்ற மக்களின் உயிர்கள் காப்பாற்றப் படலாமென்று நம்புகிறேன்."

"ஜெர்மனி முழுதும், அதன் கையாட்களாக உள்ள மற்ற எல்லா நாடுகள் முழுதும், இது போலவே நாம் தொடர்ந்து தாக்குவோம். இத்தாலி இப்போது நம் வசப்பட்டு விட்டபடியால், நாம் கடந்து செல்லவேண்டிய தூரமும், அதனால் நேரக் கூடிய ஆபத்துக்களும் வெகுவாகக் குறைந்து விட்டன. ருமேனியா, ஹங்கேரி, பின்லந்து, பல்கேரியா முதலிய ஜெர்மனிக்குத் துணை போயிருக்கும் நாடுகளின் உள்ள மக்களிடையே பெருங் கிளர்ச்சி இருந்து வருவதாகவும், சமாதானத்தை அவர்கள் விரும்புகிறார்கள் என்றும் தெளிவாக நம்பத்தக்க தகவல்கள் கிடைத்திருக்கின்றன. நாஜிகளின் ஆதிக்கத்தி லிருந்து விடுபட வேண்டு மென்று இத்தாலிய மக்கள் கொண்டிருந்த ஆசை எப்படிக் கொழுந்து விட்டெரிந்ததுவோ, அது போலவே, முற் கூறிய ஜெர்மனிக்குத் துணை போன நாடுகளிலும் விரைவில் கொழுந்து விட்டெரியும்."

ரஷ்யர் வெற்றிகள்.

"ரஷ்யர்கள் நாஜிப் படைகளை தலை தூக்க ஒட்டாமல் அடிக்கிற அடியைப் பார்த்து அமெரிக்கர்கள் மயிர்க் கூச் செறிகிறார்கள். 1941-42-ம் வருஷத்தைப் போல வெற்றி, இந்தக் கோடைகாலத்தில் ஜெர்மானியர்களுக்கு ஒன்று கூடக் கிடைக்கவில்லை."

"ரஷ்யர்கள், ஜெர்மானியர்கள் கைப்பற்றி யிருந்த எல்லாப் பகுதிகளிலுமிருந்தும் விரட்டி, அவர்களுடைய நாட்டிற்குள்ளும் போய்த் தாக்க ஆயத்தமா யிருக்கிறார்கள். வடாப்பிரிக்காவிலும், சிசிலியிலும், நடைபெற்ற யுத்தத்தினாலும், இத்தாலியில் நடைபெறும் யுத்தத்தினாலும், ஹாலந்து, பெல்ஜியம், பிரான்சு முதலிய நாடுகளின் மேல் நம் போர் விமானங்கள் பறப்பதனாலும், ஜெர்மானியர்களுடைய கவனம் இந்தப் பக்கம் திருப்பப்படுகிறது. ஆகவே, ரஷ்யர்கள் லெனின்கிராட்டிலிருந்து கருங்கடல் வரை முன்னேறிவர மிகவும் எளிதா யிருந்தது. நேச நாட்டுப் படைகளோடு போர் கொடுக்க வேண்டி பால்கன் நாடுகளிலும், தெற்கு பிரான்சிலும் இங்கிலீஷ் கால்வாயை யடுத்தும் தம் படைகளை ஜெர்மானியர்கள் வைத்திருக்கிறார்கள். இது வரை நான் கூறி வந்தவை எல்லாம் உள்ள நிலைமையை மிகவும் குறைத்துத் தான் சொன்னேன்."

ஜப்பானோடு யுத்தம்.

"மத்திய தரைக் கடல் யுத்தத்திற்கும் ஜப்பானிய யுத்தத்திற்கும் தொடர்பு உண்டு. அமெரிக்கப் படைகளும் பிரிட்டிஷ் படைகளும் வடாப்பிரிக்காவில் சென்ற நவம்பர் மாதம் முதன் முதல் போய் இறங்கிய போது, கீழக் கோடியில் கடுமையாகப் போராட வேண்டிய கடமையை நிறைவேற்றாது நாம் கைவிட்டு விட்டோ மென்று சிலர் நினைத்தார்கள். இப்படிக் குறை கூறுகிறவர்கள், வடாப்பிரிக்கா, இத்தாலியா, ரஷ்யா, பர்மா, நியூகினியா, சாலமன் தீவுகள் ஆகியவை தனித் தனி போர் முனையென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தவறு; இந்தப் போர் முனைகளெல்லாம் ஒன்றிற் கொன்று தொடர் புடையவை. விமானப் போர், கடற் போர், தரைப் போர் என்று தனித்தனியாகப் பிரித்துக் கூறப்படுவதையும் நீங்கள் கேள்விப்படுகிறீர்கள். அதுவும் தவறு. எல்லாம் ஒரே யுத்த தந்திர முறையை யொட்டித் தான் இம் மூவகைப் போராட்டங்களும் நடைபெறுகின்றன. மத்தியதரைக் கடலை நாம் மீட்டதன் பயனாக, கிழக்கிந்துமகா சமுத்திரத்திலும், வங்காளக் குடாவிலும் மீண்டும் நம் ஆதிக்கம் வலுக்க இடமுண்டாக்குகிறது."

"இவ்வாறாக, ஜப்பானியர்களின் பலமான மற்றொரு கற்கோட்டையைத் தாக்க நம்மால் கூடும். இத்தாலி நமக்கு எதிரியாகப் போராடிக் கொண்டிருக்கும் வரையிலும் இத்தாலியக் கப்பற் படைகள் மத்திய தரைக் கடலில் நம்மோடு போராடுவதற்குத் தயாராயிருந்த வரையிலும், பிரிட்டிஷ் கப்பற் படையின் பெரும் பகுதியை அங்கேயே காவல் வைத்திருக்க வேண்டி யிருந்தது. இப்போது இத்தாலியர்களால் ஆபத்து நேரிடும் என்னும் அச்சம் நீங்கிவிட்டபடியால், பிரிட்டிஷ் கப்பற் படைகளை அங்கிருந்து ஜப்பானியர்களைத் தாக்கும் பெருஞ் சேனைகளோடு சேர்ந்து கொள்ளும்படி அனுப்பப்படும்."

"இப்போது நேசநாட்டுக் கடற் படையில் வடமேற்கு ஆஸ்திரேலியாவிற்கும் இலங்கைக்கும் இடையேதான் தகுந்த பந்தோபஸ்து இல்லாமலிருக்கிறது. மத்யதரைக் கடலிலிருந்து போகும் கடற்படைகள் இந்த குறையை நீக்கிவிடும். கீழ்நாடுகளில் மகா கடுமையாக நெடு நாட்கள் போராட வேண்டி யிருக்கும். இதற்கு நாம் ஆயத்தமா யிருக்கவேண்டும். இங்கே வெற்றி பெற வேண்டி பெரும் நஷ்டங்களுக்கு ஆளாக வேண்டி யிருக்கும். ஜப்பானிய ஆதிக்கத்தைத் தவிடுபொடியாக்கினால் மட்டுந் தான் அதை வென்றவர்களாவோம். எதிர்காலத்தில் நமக்குக் கடுமையான போராட்டமாக இருக்கலாம்; ஆனால், ஜெனரல் டோஜோவிற்கும் அவரைச் சேர்ந்த கொலைகாரக் கூட்டத்திற்கும் நிலைமை எப்படி யிருக்கும்? எல்லா திசைகளிலிருந்தும் அப்போது நேசநாட்டுப் படைகள் ஜப்பானியர்களை வளைந்து கொள்ளுவார்கள். ஜெனரலாசிமோ ஷியாங்-கேய்-ஷேக், ஜெனரல் மெக்கார்தர், அட்மிரல் நிமிட்ஸ், அட்மிரல் லார்ட் லூயி மௌண்ட்பாட்டன் ஆகியோரின் படைகள் ஜப்பானியர்களை வளைந்து கொண்டால், அவர்கள் பாடு அம்பலத்திற்கு வந்து விடுமென்பது உறுதி."

"ஐரோப்பாவிலும் ஜெர்மனியிலும் எப்படி நமது படைகள் பலவிடங்களிலிருந்து எதிரியை நிர்தூளி செய்கின்றனவோ, அதுபோலவே தான் பல பசிபிக் போர்முனைகளிலும் உள்ள படைகள் ஒன்றிற்கொன்று சம்பந்தங் கொண்டு இருக்கின்றன. ஜப்பானியர்கள் சான்பிரான்ஸிஸ்கோ முதலிய நகரங்களைத் தாக்குவார்களோ என்று அமெரிக்க மக்கள் அஞ்சிக் கொண்டிருந்த சமயத்தில், கிஸ்கா, அட்டு ஆகிய தீவுகளை ஜப்பானியர்களிடமிருந்து கைப்பற்றினோம். இது நாம் முன்பே திட்டமிட்டபடி சம்பவித்ததுதான். நிற்க, சாலமன் தீவுகளில் ஜப்பானியர்களோடு கடுமையாகப் போராடி வென்று நமது படைகளைக்கண்டு ஜப்பானியர்கள் அஞ்சும்படியான நிலைமையை உண்டாக்கிவிட்டோம். அநேக தீவுகளில் நல்ல தளங்களை அமைத்துக் கொண்டோம். ஆஸ்திரேலியாவிற்கு ஏற்பட்டிருந்த ஆபத்து நீங்கிவிட்டது."

ஸ்டாலின் பாராட்டுதல்கள்

வீரரின் பெருமை வீரருக்குத் தான் தெரியும்.

ரஷ்ய வீரர்களை ஸ்டாலின் பாராட்டுவது நியாயந் தானே !

ரஷ்ய சர்வாதிகாரியான ஸ்டாலின் தன் படைத் தலைவர்களான ஜெனரல் எரிமெங்கோ, ஜெனரல் சொகோலோப்ஸ்கி ஆகிய இருவருக்கும் கீழ்க்கண்ட செய்தியை விடுத்திருக்கிறார் :—

" கலினின் போர் முனையிலுள்ள நமது படைகள் நான்கு நாட்கள் கடும் போராடின. கடைசியில், பலமாக அரண் செய்யப்பட்டிருந்த ஜெர்மன் படைகளைப் பிளந்து கொண்டு புகுந்தன. அரண் செய்யப்பட்டிருந்த பல சிறந்த கோட்டைகளைக் கைப்பற்றின. ஸ்மாலென்ஸ்க்குக்குப் போகும் வழியிலுள்ள மிகவும் முக்கியமான தோர் ஜெர்மன் எதிர்ப்புக் கட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன. இந்த ஸ்மாலென்ஸ்க நகரம் டுகோப்ஷைனாவைச் சேர்ந்தது."

" மேற்குப் போர் முனையில் கடுமையான எதிரி எதிரிப்புக்களைச் சமாளித்துக் கொண்டு, ஜெர்மானியர்களின் முக்கிய மான எதிர்ப்புக் கட்டமும் ரயில்வே ஜங்ஷனுமான யார்ட்சீவோ என்னும் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டன. ஆகவே, ஸ்மாலென்ஸ்க்குக்குத் தலைவாசல் எனத் தக்க ஜெர்மானியரின் முக்கியமான எதிர்ப்புக் கட்டங்கள் மண்ணைக் கவ்வின."

" அங்கே நம் படைகள் பெற்ற வெற்றிகளை முன்னிட்டு, அவைகள் மீட்ட டுகோப்ஷைனா, யார்ட்சீவோ ஆகிய பெயர்களை கௌரவச் சின்னங்களாக நம் படைகள் சூட்டிக் கொள்ளட்டும். செப்டெம்பர் மாதம் 19-ம் தேதி மாலை 9 மணிக்கு (இந்திய மணி 6-க்கு) இந்த வீரர்களை நமது தலை நகரம் மதித்து மரியாதை செலுத்தும். 124 பீரங்கிகளை நிறுத்தி, ஒவ்வொன்றிலும் 12 முறை மரியாதை குண்டுகள் போடப்படும். உங்கள் தலைமையில், அந்தப் போராட்டங்களில் கலந்து கொண்ட அனைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன். நாம் நாட்டை மீட்கும் பொருட்டுப் போராடி உயிர்விட்ட வீரத் தியாகிகளின் புகழொளி ஒரு நாளும் மங்காது வீசுக ! படை யெடுத்து வந்த ஜெர்மானியர் அழிக ! "

—மார்ஷல் ஸ்டாலின்,
செப்டெம்பர் மாதம் 19-ம் தேதி விடுத்த செய்தி.

* * * * * * *

மார்ஷல் ஸ்டாலின் தன் படைகளுக்கு விடுத்த மற்றொரு செய்தியாவது :—

" செப்டெம்பர் மாதம் 17, 18-ம் தேதிகளில் உக்ரேனிலுள்ள நமது படைகள், ப்ரிலுகி, ரோம்னி, லுப்னி, ரோமடான், மொரொகொராட், க்ரஸ்னோக்ராட் ஆகிய பட்டணங்களை கைப்பற்றின. இந்த நகரங்களை மீட்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த படைகள் அந்தந்தப் பட்டணங்களின் பெயர்களைக் கௌரவச் சின்னமாகச் சூட்டிக் கொள்ளட்டும்."

* * * * * * *

ஜெனரல் கொல்பகோஹிக்கு மார்ஷல் ஸ்டாலின் விடுத்த மற்றொரு செய்தியாவது :—

" செப்டெம்பர் மாதம் 17-ம் தேதி பிரயன்ஸ்க்குக்குத் தெற்கே யிருந்த நம் படைகள் டெஸ்னா ஆற்றைக் கடந்து, அகன்றதோர் போர் முனையில் போராடி வென்று, துருப்சேப்ஸ்க் என்னும் பட்டணத்தை கைப்பற்றின. அவை மேற்கு நோக்கி மேலும் தாக்கிக் கொண்டு போகின்றன. இங்கே மகா வீரத்தோடு போராடி, டெஸ்னா ஆற்றைக் கடந்த படைத் தலைவர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் "ஆர்டர் ஆப் தி சுபரோப்" என்னும் கௌரவப் பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

கொலைகார நாஸிகள்

யுத்தம் இன்னும் ஒய்ந்தபாடில்லை. இப்பொழுதே நாஸிகள் செய்யும் அக்கிரமங்களைப் பற்றிய செய்திகள் நிறைய வந்துகொண்டிருக்கின்றன. யுத்தம் முடிந்த பின் இன்னும் எத்தனைச் செய்திகள் வெளியாகப் போகின்றனவோ தெரியவில்லை. நாஸிகள் கால் வைத்த இடமெல்லாம், பஸ்மா சூரன் கை வைத்த இடங்கள் மாதிரி பாழாகப் போயிருக்கின்றன. அவர்கள் போலந்திலும், பிரான்ஸிலும், டென்மார்க்கிலும், நார்வேயிலும், இப்பொழுது ருஷ்யாவிலும் செய்திருக்கும் அக்கிரமங்கள் கொஞ்ச நஞ்ச மல்ல. அவற்றின் விவரங்களைக் கேட்டால், நெஞ்சு பொறுக்காது. காலகாலனைப்போல் மாறுவார்கள் கருணை நிறைந்தவர்கள் ஒவ்வொருவரும்.

அப்படியும் அவர்கள் தரித்திரம் தீர்ந்ததா ?

பெண்களையும், குழந்தைகளையும், கிழவர்களையும் ஏதோ விளையாட்டுப் போல, ஹதம் செய்து களித்திருக்கிறார்கள். தங்களுடைய அட்டகாசத்திற்கு ஆதரவளிக்காது முணகியவர்களை யெல்லாம் சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள். வயல்களிலும், நிலக்கரிச் சுரங்கங்களிலும், எண்ணெய்க் கிணறுகளிலும் உள்ளவற்றை யெல்லாம் சுரண்டி எடுத்து விட்டார்கள். அப்படியும் அவர்களுடைய தரித்திரம் தீர்ந்ததா ? இல்லை.

இரண்டு வருஷ காலமாக எத்தனை லக்ஷம் ஜெர்மானிய வீரர்கள் ஹிட்லரின் யுத்த வெறிக்காகத் தம் உயிரை ருஷ்ய மண்ணிலே விட்டிருக்கிறார்கள்! அவ்வளவு தியாகம் செய்தும், ஹிட்லர் ருஷ்யாவில் சாதித்த தென்ன ? அவரது ஜம்பம் மண்ணைக் கௌவியது. இரண்டு வருஷ காலமாகப் பிடித்து, பலப்படுத்திய இடங்கள் எல்லாம், 'பட், பட்' என சொக்கப் பனையில் அகப்பட்ட மரத்துண்டுகள் போல, வெடித்து விழுகின்றன. ஜெர்மானியர்கள் எதற்கு மஞ்சாதவர்கள் ; முன் வைத்த காலைப் பின் வைக்காதவர்கள் என்றிருந்த நிலைமை எல்லாம், மாய நிலை என்பதை உலகோர் அறிந்து கொண்டனர்.

ஹிட்லர் கோடைப் படையெடுப்பு கோவிந்தா !

ஹிட்லரின் கோடைப் படை யெடுப்பு 'கோவிந்தா' ஆகி விட்டது. ருஷ்யர்கள் அந்தப் படை யெடுப்பை சமாளித்துக் கொண்டதோடு, ஜெர்மானியரை விரட்டவும் தொடங்கினர். ஜெர்மானியர் ஆப்பிரிக்காவில் ஓடிய ஓட்டத்தைவிட இன்னும் வேகமாக ருஷ்யாவில் ஓடுகிறார்கள்.

ஸ்டாலின்கிராடில் நாஸிகளை முறியடித்து, இடுப்பை ஒடித்தபின், ருஷ்யர்கள் ஐந்நூறு மைல்களுக்குமேல் முன்னேறிவிட்டார்கள். கோடிக் கணக்கான ஏக்கரா விஸ்தீர்ணமுள்ள பிரதேசங்கள் நாஸிக் கொலைகாரர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டன. ருஷ்ய செஞ்சேனை வெற்றி மேல் வெற்றியாக வாரிக் கட்டிக்கொண்டு, பிரையான்ஸ்க், ஸ்டாலினோ, நோவோரஸிஸ்க் போன்ற முக்யமான இடங்களை யெல்லாம் பிடித்துக் கொண்டு பாய்ந்து வருகிறார்கள். அவர்களை நிறுத்த நாஸிகள் செய்யும் முயற்சிகள் எல்லாம் வியர்த்தமாகிக் கொண்டிருக்கின்றன.

ருஷ்யாவிலே ஒரு களஞ்சியம்போலுள்ள யூக்ரேன் பிரதேசம் ருஷ்யர் வசமாகி வருகிறது. அதன் தலைநகரமான கியெவ் நகரையும், வடக்கே மாஸ்கோவிற்கு மேற்கேயுள்ள ஸ்மாலனெஸ்க் நகரையும் கைப்பற்றும் நோக்கத்துடன், பிரமாண்டமான இருபடைகள் விரைந்து சென்று கொண்டிருக்கின்றன.

ஸ்மாலனெஸ்கைத் தான் ஹிட்லர் தம்முடைய முக்ய தளமாகக் கொண்டு, ருஷ்யப் போரையே நடத்திக்கொண்டிருக்கிறார். அந்த நகருக்கு 'வாசல்' போலுள்ள ஒரு முக்ய நகரையும் ருஷ்யர்கள் பிடித்து விட்டார்கள். ஸ்மாலனெஸ்க் நகர் இன்னும் வெகுதூரத்திலில்லை. கியெவ் நகரத்துக்குச் சிறிது தூரத்திலே முன்பெல்லாம் நாஸிகளின் துப்பாக்கி வேட்டுகளை கேட்டுக்கொண்டிருந்தன. அங்கெல்லாம் இப்பொழுது, ருஷ்யர்களின் நெடுந்தூர பீரங்கிகளின் முழக்கம் சதா த்வனித்துக்கொண்டிருக்கிறதாம்.

முன்பு நெப்போலியன் எந்த வழியாக ருஷ்யாவிலிருந்து மனமுடைந்து மேற்கே சென்றாரோ, அதே பாதை வழியாகவே நாஸிகள் இன்று துரத்தப்படுவது குறிப்பிடத்தக்க விசேஷமாகும்.

ஸ்மாலனெஸ்கும், கியெவும் போய்விட்டால், ருஷ்யாவிலேயே ஜெர்மானியர் அதற்கப்பால் தைரியமாகக் காலூன்றி நிற்க வேறே சரியான இடம் கிடையாது. அப்புறம் ருஷ்ய மண்ணிலிருந்தே ஜெர்மானியர்களைக் காலி செய்துகொண்டு, ருஷ்யாவின் காலில் விழ ஹிட்லர் தீர்மானித்தாலும் தீர்மானிக்கலாம்.

ஆனால், நேசதேசத்தவர்களோடு சேர்ந்த ருஷ்யா, அவ்வாறு ஜெர்மனியையும், ஹிட்லரையும் சும்மா விட்டுவிடாது என்றே நினைக்கிறோம். கூடிய சீக்கிரமே மாஸ்கோவிலேயே, அமெரிக்கா, பிரிட்டன், ருஷ்யா ஆகிய மூன்று வல்லரசுகளின் பிரதிநிதிகளும் கூடுவார்கள் என்று சர்ச்சில் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்ததும் பார்லிமெண்டில் பேசிய போது கூறியிருக்கிறார். அங்கே, ஹிட்லருக்கு முடிவுகட்ட திட்டங்கள் போடப்படக்கூடும். இனி ஹிட்லர் எளிதில் தப்புவதென்பது முடியாது.

பொம்மை அதிகாரத்துவம்.

இத்தாலிய மன்னரின் கைதியாக இருந்த முஸோலினியை, நேச தேசத்தவர்கள் யுத்தக் கைதியாக சமாதான ஒப்பந்தப்படி பெறுமுன், ஹிட்லர் வெகு சாமர்த்தியமாகத் திட்டம்போட்டு, எவ்வளவோ பாது காப்புகளிருந்தபோதிலும், பாரசூட் படையினரைக் கொண்டு, கொத்திக்கொண்டு போய்விட்டார். அப்புறம், குடியரசு பாஸிஸ்ட் கட்சி என்றொன்றை சிருஷ்டித்து, திரும்பவும் அதற்குத் தலைவராக முஸோலினியை ஆக்கியிருக்கிறார். அசல் சர்வாதிகாரத்வம் போய், பொம்மை அதிகாரத்வம் பெற்றிருக்கிறார் முஸோலினி. என்ன வீழ்ச்சி! என்ன வீழ்ச்சி! இதுமாதிரி கஷ்டம் யாருக்கும் வரவேண்டாம்! கிணற்றில் விழுந்தவரை வெளியே தூக்கியதுபோல் அவரை ஹிட்லர் காப்பாற்றியிருக்கிறார். அப்படிப்பட்ட முஸோலினி இத்தாலிய அரசரைத் தாக்கத் தொடங்கியிருக்கிறார். இனி இத்தாலிக்கே அரசர் தேவையில்லை ; குடியரசே வேணுமென்கிறார். எத்தகைய ஞானோதயம்! ஹிட்லரின் கையாளுக்கு இவ்வளவு வாயா ?

அது சரி! 'பல்டி' யடித்த முஸோலினியைக் காப்பாற்ற, ஒரு ஹிட்லர் இருந்தார். ஆனால், ஹிட்லர் வீழ்ச்சிவுறும் போது அவரை யார் காக்கப் போகிறார்கள் ? கடவுள் தான் காக்க வேண்டும்! ஆனால் உலக சமாதானத்தை அலங்கோலப் படுத்திய ஹிட்லரை, கடவுள் தான் காக்கத் துணிவாரா என்ன ?

இத்தாலியிலே கடுமையான சேதங்கள் ஏற்பட்ட போதிலும் நேச தேசத்தவர்கள் சளைக்காது ஜெர்மானியரைத் துரத்தத் தொடங்கிவிட்டார்கள். எட்டாவது படை ஜமாய்த்துக் கொண்டிருக்கிறது. நேபிள்ஸ், வெனீஸ் நகரங்கள் எல்லாம் நேச தேச குண்டு வீச்சுக்குக் குறியாகி யிருக்கின்றன. ஏகப்பட்ட படைகளை இத்தாலியில் கொண்டு குவிக்கிறாராம் ஹிட்லர். துருக்கிக்குச் சமீபத்தில் உள்ள டாடிகானஸ், ரோட்ஸ் தீவுகளிலும், சார்டீனியா தீவிலும், கார்ஸிகாவிலேயும் நேச தேசத்தவர் இறங்கி விட்டார்களாம். அடுத்தாற் போல பால்கன் பிரதேசங்களை நேச தேசத்தவர் தாக்கலாம்.

இத்தாலி, ஸிஸிலிப் போர் எல்லாம், மேற்கு ஐரோப்பா மீது பாய்வதற்குப் பிரதியாக எடுக்கப்பட்ட முயற்சியல்ல என்று சர்ச்சில் கூறி யிருக்கிறார். அதன் அர்த்தம் என்ன என்பதை நாம் தனியாக எடுத்துக் கூறவேண்டுமோ ?

நாஸிகளைப் பூண்டில்லாமல் அடிக்கும் வரை நேச தேசத்தவர் நிற்கப் போவதில்லை. அது சிரமமான காரியம் தான். அதற்கு நேச தேசத்தவர்கள் தயாராகவே இருக்கிறார்கள்.

ஜப்பானிய கப்பற் படைச் சேதங்கள்

யுத்தம் ஆரம்பமானது முதல் செப்டெம்பர் மாதம் 17-ம் தேதி வரை ஜப்பானியக் கப்பல்களுக்கு நேர்ந்த சேதமாவது :—

கப்பற் படைக் கணக்குகளிலிருந்து திரட்டியது

கப்பல் வகை.	மூழ்கடிக்கப் பட்டவை.	மூழ்கியதாகக் கருதப் படுபவை.	காயப் பட்டவை.
போர்க் கப்பல்கள்—			
போர்க் கப்பல்கள்	2	—	9
விமானந்தாங்கிக் கப்பல்கள் ..	6	1	7
'க்ரூய்ஸர்கள்'	26	4	47
நாசகாரி கப்பல்கள்	76	21	62
நீர்மூழ்கிக் கப்பல்கள்	6	1	6
'டெண்டர்'கள்	1	1	4
வகுக்கப்படாத கப்பல்கள் ..	25	3	17
மொத்தம் ..	142	31	152
போர் கப்பல்க ளல்லாதவை	275	27	121

ஜெனரல் மெக்கார்தர் அறிக்கைகளினின்று திரட்டியது.

கப்பல் வகை.	மூழ்கடிக்கப் பட்டவை.	மூழ்கியதாகக் கருதப் படுபவை.	காயம் பட்டவை.
போர்க் கப்பல்கள்—			
போர்க் கப்பல்கள்	—	—	1
விமானந்தாங்கிக் கப்பல்கள் ..	1	—	2
'க்ரூய்சர்'கள்	11	—	22
நாசகாரிக் கப்பல்கள்	21	3	28
நீர்மூழ்கிக் கப்பல்கள்	10	—	2
'டெண்டர்'கள்	2	—	—
பீரங்கிக் கப்பல்கள்	4	—	—
'டார்பிடோ' படகுகள் ..	1	1	1
வகுக்கப்படாத கப்பல்கள் ..	1	1	1
மொத்தம் ..	51	5	57
போராடாத கப்பல்கள் ..	432	31	238
அடையாளந் தெரியாத கப்பல்கள்.	31	1	15

இவை மட்டு மன்றி, சிறு படகுகளும், மீன் பிடிக்கும் படகுகளும் மற்றவகைப் படகுகளும் சேர்ந்து 438 படகுகள் மூழ்கடிக்கப்பட்டன அல்லது காயப்பட்டன.

என்ன ஆச்சரியம்!

நேற்று வரை, 'அடே! நீ! நான்!' என்று நம்மை அழைத்துக் கொண்டிருந்த ஒருவன், இன்று திடுதிப் என்று, நம்மைப் பார்த்து, 'ப்ரதர்! வாங்க! என்னுங்க நம்பளைக் கவனிக்கவே மாட்டேங்கிறீங்களே!' என்று பேச ஆரம்பிக்கிறான் என வைத்துக் கொள்ளுங்கள். 'சரி! என்னமோ நடந்திருக்கு விஷயம்!' என்று தீர்மானிப்போமா இல்லையா? அதற்கும் மறு நாள், 'சாமி! நமஸ்காரங்க! என்று அதே ஆசாமி நமக்கு ஒரு கும்பிடு போட்டால், 'என்ன ஆச்சரியம்!' என்றுதானே மூக்கின் மீது கை வைத்து, பிரமித்து நின்று அவனைப் பார்ப்போம்!

ஜப்பான் செய்துவரும் காரியங்களை நினைக்கும் பொழுது, மேற்கண்ட விஷயங்களும் நினைவிற்கு வருகின்றன. சென்ற ஆறேழு வருஷங்களாக சீனாவை நசுக்கி,வாயில் போட்டுக்கொண்டு, ஏப்பம் விட ஜப்பான் முயன்று கொண்டிருக்கிறது என்பது உலகறிந்த ரகசியம். ஒரு பாவமும் அறியாத சீனாவை சர்வாதிகாரத் திமிர் பிடித்து, வம்புச் சண்டைக்கு இழுத்தது ஜப்பான். சீனர்களிடை ஏகச் சண்டை சச்சரவுகள் இருக்கின்றன. ஆகையால் வெகு எளிதாக சீனா முழுவதையும் கைப்பற்றி, ஜப்பானிய சாம்ராஜ்யத்தை பரந்து விளங்கும்படி செய்யலாம் என்று கனவு கண்டது ஜப்பான். அதற்கேற்றாற்போல, ராணுவ வெறி பிடித்த சிலரது கைகள் அங்கே வலுத்து வரலாயின. சக்கரவர்த்தியும் அப்பாவி; ஆட்டுவார் கைப்பிள்ளை. அதனாலே, சீனச் சண்டை ஆரம்பிக்கப் பெற்றபோதுங் கூட, அவர் வாய் திறக்கவே இல்லை.

ஜப்பான் சுரண்டல் வேலை ஆரம்பம்

ஜப்பானியர் ஜோராக மஞ்சூரியா, பர்மோஸா என்ற பிரதேசங்களைக் கைப்பற்றினார்கள். மஞ்சூரியாவிலே ஒரு பொம்மை சர்க்காரை ஏற்படுத்தினார்கள். அந்தப் பிரதேசத்தைச் சுரண்டத் தொடங்கிவிட்டார்கள்.

சீனர்கள் உஷாரானார்கள். தமது பரிதாபகரமான நிலைமையை உணர்ந்தார்கள். ஜப்பான் சீனாவை சண்டைக் கிழுத்ததைக் குறித்து ஜப்பானுக்கு சீனர்கள் இன்று பெரிய 'தாங்க்ஸ்' அல்லவா சொல்ல வேண்டும்! ஏன் தெரியுமா? ஜப்பான் சண்டைக்குக் கிளம்பியதால் தான், சீனர்களிடை ஒற்றுமை ஏற்பட்டது. ஷியாங்-கேய்-ஷேக்கின் முயற்சிகள் பலனளித்தன. ஜப்பானியர்கள் அதிகம் வாலை ஆட்டமுடியாது போய்விட்டது. அதிகமான ஆயுதங்களோ, நவீன ஆயுதங்களோ இல்லாத போதிலும், சீனர்கள், தேசபக்தியையே பெரிய ஆயுதமாகக் கொண்டு, பிரமாதமான தைரியத்துடன் போராடலானார்கள். கருங்கல்லை கடிக்க முயலுகிறவன் கதியும், சீனாவைக் கபளீகரம் செய்ய முயன்ற ஜப்பானின் கதியும் ஒன்றாகவே இருந்தது.

சீனாவை நசுக்க உதவி கோரும் ஜப்பான்

இந்தச் சமயத்திலே, நேசதேசத்தவர்கள் பேசாதிருந்தார்கள். அதைப் பார்த்த ஜப்பான், 'ஐயா! நீங்கள் எல்லாம் எனக்கு உதவி செய்யுங்களய்யா! தொழில், நாகரிகம் எல்லாம் அபிவிருத்தியாக வேண்டுமா இல்லையா இந்தப் பிரதேசங்களிலே? அதற்காகவே இப்பொழுது சண்டை போடுகிறேனய்யா! தவிர, ஜப்பான் எவ்வளவு சிறிய தீவு பாருங்களய்யா! நாளுக்கு நாள் அதிகமாகி வரும் எங்கள் ஜனங்களுக்கு, தாராளமாக இருக்க இடம் வேண்டாமா ஐயா? கொஞ்சம் ஒரு கை கொடுக்கிறீர்களா, சீனாவைக் கசக்க?' என்று கேட்டது.

ஆனால், நேசதேசத்தவர்கள் அசடுகள் அல்ல. ஜப்பானின் உண்மை நோக்கம் இன்னதென்பதை நன்றாக உணர்ந்தார்கள் அவர்கள். சீனாவிற்கே தங்கள் அனுதாபத்தைக் காட்ட விரும்பினார்கள் அவர்கள். ஜப்பானின் சர்க்கரைப் பேச்சைக் கேட்டு அவர்கள் மயங்கவில்லை. ஜப்பான் விடாது போரை நடத்திக்கொண்டிருந்தது. இடங்களைப் பிடிப்பதும், இழப்பதுமாக இருந்தது. சீனாவிற்குத் தலைநகராக உள்ள சுங்கிங் நகரத்தை ஜப்பானியர் தவிடுபொடியாக்க முயன்றனர். சுங்கிங் மீது குண்டு மழை பொழிந்தனர். ஆனால், அங்குள்ள சீனர்களின் திடமான மனோ உறுதியை அவர்களால் அசைக்கவே முடியவில்லை. ஜப்பானியரது ஆத்திரம் அதிமாக ஆக, சீனரின் ஊக்கமும், ரோஷமும், மனோ தைரியமும் வலுத்துவிட்டன. இதுவரை எத்தனையோ சீன நகரங்களை ஜப்பானியர் பிடித்துவிட்டார்கள். எத்தனையோ சீனர்களைப் பலியாகக்கொண்டுவிட்டார்கள். எத்தனையோ குடும்பங்களைச் சந்தியில் நிறுத்திவிட்டார்கள்.

பூரண வெற்றி காணமுடியவில்லை

ஆனாலும், ஜப்பானியர் சீனாவில் பூரண வெற்றியைக் காணமுடியவில்லை. இனி அது தமக்குக் கிடைக்குமென்று அவர்கள் கனவிலும் கருதவேண்டியதில்லை. சும்மா படுத்திருந்த பீமசேனனை ஊசிகொண்டு குத்தி எழுப்பினால், அவன் அதற்கப்புறமும் சும்மா இருப்பானா? அமெரிக்காவும், பிரிட்டனும் பேசாது தானிருந்தன. அந்த நாடுகள் மீதும் ஜப்பான் கொழுப்பெடுத்து, போர் தொடுத்தது. ஆரம்ப ஜோரில், பல இடங்களைப் பிடித்துக் கொண்டுவிட்டது. ஆனால் அகலக் கால் வைத்துவிட்டது. கால்வைத்த இடங்களை யெல்லாம் காப்பாற்றியாக வேண்டும், அது சிரமமாயிருக்கிறது.

நேசதேசத்தாரின் கை ரொம்ப ரொம்ப ஓங்கிவிட்டது. முன்பெல்லாம் கீழ்த் திசையிலே, விமானங்கள் என்றாலே அதிசயப் பொருள்களாக இருந்தன. அந்தச் சமயத்திலே, ஜப்பானியர் பல விமானங்களோடு வந்து, கோழிக் குஞ்சுகள்மீது பாயும் பருந்தென கொட்டை பரப்பிவிட்டார்கள்.

ஆனால், அதே கோழிக் குஞ்சுகள் இன்று பெரிய கழுகுகளாக மாறியிருக்கின்றன. கழுகுகளிடம் கொட்டைப் பருந்து என்ன செய்ய முடியும்? கழுகுகள், பருந்துகளைக் கொத்தி எறிந்துவிடாவா? அதோடு, பருந்துகளின் கூடுகளையே கலைத்துத் தள்ளிவிடாவா?

இதை ஜப்பானியர் நன்றாகத் தெரிந்துகொண்டு விட்டார்கள். இனி மேலே பறக்கிற தென்பது சாத்தியமில்லை என்பதும் அவர்களுக்குப் புரிந்துபோய்விட்டது. ஒருபுறம் சியாங்கே ஷேக் உத்சாகத்தோடு நிற்கிறார். பழைய கவலைகள் ஒன்றும் அவர் முகத்தில் காணப்படவில்லை. இன்னொருபுறம் திரும்பினாலோ, கம்ஸன் கண்ட கனவுபோல இருக்கிறது. எங்கு திரும்பினாலும், நேசதேச வீரதீரத் தலைவர்கள் காணப்படுகின்றனர். ஜெனரல் மக் ஆர்தர் என்ன, அட்மிரல் நிமிட்ஸ் என்ன, லார்ட் லூயி மவுண்ட் பாட்டன் என்ன எல்லோரும் தத்தம் படைகளோடும், ஜனாதிபதி ரூஸ்வெல்டும், பிரதம மந்திரி சர்ச்சிலும், சீனப் பிரதிநிதிகளும், மற்றுமுள்ள நேசதேசப் படைத்தலைவர்களும் கலந்து க்யூபெக் மகா நாட்டில் அலசிப் பார்த்து வகுத்திருக்கும் திட்டப்படி ஜப்பானைத் தாக்க சித்தமாக இருக்கிறார்கள்.

வால் ஒட்ட அறுந்தது போலத்தான்

தென் மேற்குப் பசிபிக் பிரதேசங்களிலே, ஜப்பானியர் இப்பொழுது தொடர்ந்து உதை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வெகு சிரமப்பட்டு, பெரிய கடற்படைத் தளங்களாகவும், விமான நிலையங்களாகவும் ஆக்கியிருந்த இடங்கள் பலவற்றை நேசதேசப் படையினர், ஜெனரல் மெக்ஆர்தர் தலைமையில் கைப்பற்றிவிட்டார்கள். நியூ கினிய தீவுகளிலே ஜப்பானியருக்கு வால் ஒட்ட அறுந்தது போல்தான். லே, சலாமுவா என்ற இடங்களை வெகு சிரமப்பட்டுப் பிடித்தார்கள். போன வாரத்திலே ஜப்பானியர் வெறி பிடித்தவர்கள் போல் தான் போராடுகிறார்கள். அவர்களில் கடைசி ஆள்வரை தைரியமாக நின்று போராடத்தான் செய்தார்கள். ஆனாலும், நேசதேசத்தாருக்கு இப்பொழுது அபார விமான பலம் உண்டாகியிருக்கிறது, ஆகவேதான், ஜப்பானியர் ஜம்பம் அவர்களிடம் சாயவில்லை.

வடக்கே அலூஷியன் தீவுகளிலே ஜப்பானியருக்கு அமெரிக்கப் படைகள் தொல்லையை விளைவித்தன. உடனே கிஸ்கா, அட்டு தீவுகளிலிருந்த ஜப்பானியப் படைகள் கொஞ்சம் காலியாயின. இதுதான் சமயமென அத்தீவுகளை அமெரிக்கர்கள் கைப்பற்றினர்.

ஜப்பான் பிரசாரப் புலிகளின் ஊளை

ஜப்பான் மண்ணை நேசதேசத்தவர் தம் கண்களாலும் காணமுடியாது என்று ஜப்பானியப் பிரசாரப் புலிகள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. அந்தக்காலம் மாறிவிட்டது. 'ஜப்பானிய மக்களே! ஜப்பான் எந்தச் சமயத்திலும் ஆகாயத்திலிருந்து தாக்கப்படலாம். ஆகவே, விமானப் படையெடுப்புகளிலிருந்தும் உங்களைக் காத்துக்கொள்ள நன்றாகப் பழகிக் கொள்ளுங்கள். அமெரிக்கர்கள் வெகு சமீபத்தில் வந்துவிட்டார்கள், என்று ஜப்பானிய ரேடியோ எச்சரிக்கும் காலமாகிவிட்டது.

சீனாவிற்கும் நேசதேச உதவி போய்க்கொண்டே இருக்கிறது. விமானங்களும், அவற்றிற்கு வேண்டிய சாமான்களும், மற்ற ஆயுதங்களும், வானவெளி வழியாகவே அங்குபோய் இறங்கிக்கொண்டிருக்கின்றன. ரொம்ப சிரமமான முறை தானிது. ஆனாலும், பர்மா ரஸ்தா திறக்கப்படும் வரை கைகளைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்கமுடியுமா? கீழ்த் திசைக்கு ஒரு சைனா, மேல்திசைக்கு ஒரு ருஷ்யா என்றிருப்பதால்தான், அச்சுநாட்டு சிங்கங்கள் அதிக அட்டகாசம் செய்யாமலிருக்கின்றன. அந்த சிங்கங்களின் சத்தை இந்த இரு நாடுகளும் மெள்ள மெள்ள உறிஞ்சிக் கொண்டேயிருக்கின்றன.

இப்பொழுது, போதாக் குறைக்கு இத்தாலி வேறே 'பல்டி' அடித்துவிட்டது. இத்தாலியக் கப்பற் படையும் நேசதேசத்தாரிடம் சரண் புகுந்துவிட்டது. ஒரு வாரத்துக்கு முன் வரை, கொழும்பு நகரத்தருகே வரவும் தயங்கக் கூடிய இத்தாலியக் கப்பல் ஒன்று, இப்பொழுது அதே துறைமுகத்தில் சமாதானக் கொடியோடு சரண் புகுந்து கிடக்கிறது.

இத்தாலி யுத்தத்திலிருந்து விலகிவிட்டதால், மத்ய தரைக் கடல் பிரதேசத்திலே, காவல் புரிந்து கொண்டிருந்த பெரிய யுத்தக் கப்பல்கள் பலவற்றிற்கு வேலை குறைந்துவிட்டது. அதனால், அந்தக் கப்பல்களை இந்து மகா சமுத்திரத்திற்கும் வங்காளக் குடாக்கடலுக்கும் அனுப்பி விடலாமல்லவா? இந்து மகா சமுத்திரம் பெரில் சமுத்திரம் தான். அதிலே நம்மவர்களது பாராக் கப்பல்கள் அதிகமாக இல்லை. அதனால் தான், ஜப்பானியர்கள் தைரியமாக ஜெர்மனிக்கும், ஜெர்மானியர் நெஞ்சழுத்தத்துடன் ஜப்பானுக்கும் நீர் மூழ்கிகளில் இவ்வளவு காலம் போக முடிந்தது.

ஜப்பானியர் சேஷ்டைகள் குறையும்

அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலே, எப்படி நேச தேசத்தார் எடுத்துக் கொண்ட பாதுகாப்பு ஏற்பாடுகளால் ஜெர்மன் நீர் மூழ்கிகளின் கொட்டம் அடங்கிற்றோ, அதே தினுசிலே இனி இந்து மகா சமுத்திரத்திலும் ஜப்பானியருடைய சேஷ்டைகள் குறையும்.

பெரிய யுத்தக் கப்பல்கள் மத்யதரைக் கடலிலிருந்து கிழக்கே வந்துவிடு மென்பதால், கூடிய சீக்கிரமே பர்மாமீது இந்தியாவின் கீழ்கரையிலே பல பிரதேசங்களிலிருந்தும், நேச தேசத்தவர் படையெடுக்கக் கூடும் என்று எதிர் பார்க்கலாம். அதற்கான திட்டங்களும் போடப் பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றின் விவரங்கள் மட்டும் போகப் போகத் தான் தெரியும்.

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் சென்றவாரம் செய்துள்ள பிரசங்கத்திலிருந்து, ஜப்பானை நேச தேசத்தவர் மறந்து விடவில்லை. ஹிட்லருக்கு அளிப்பதற் கென்று வைத்துள்ள மரியாதைகளை யெல்லாம், டோஜோவிற்கும் அளிக்கப் போகிறார்கள்; அவர்கள், ஜப்பானிய அரணைப் பல இடங்களில் பாய்ந்து தகர்க்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இன்னும் சில தினங்களிலேயே இந்த வேலைகள் ஆரம்பமாகலாம். அதற்குள் பர்மா மழையும் நின்றுவிடும் என்று தெரிகிறது.

ஒரு நாளைக்கு 25 கோடி டாலர் செலவு.

ஒரு நாளைக்கு இருபத்தைந்து கோடி டாலர்களை அமெரிக்கா இந்த யுத்தத்திற்காகச் செலவிட்டுக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவிலே, இன்னும் ஏராளமான ஆட்களை ராணுவத்தில் சேர்க்கப் போகிறார்கள். சுக புருஷர்களாக இருந்தவர்கள் எல்லாம் காக்கி உடை அணிந்து, உலக சுதந்திரத்திற்காகப் போராடும் புருஷர்களாகி வருகிறார்கள். எதிர் காலத்தில் ஏகப்பட்ட நஷ்டங்கள் ஏற்படலாம். ஆனாலும் இறுதி வெற்றி நமக்கே! அச்சு நாடுகளில் உள்ள சர்வாதிகாரிகளின் பவிஷு எல்லாம் போய், அவர்களும், அவர்களைச் சேர்ந்தவர்களும் சரணடைந்து, அப்பால் யுத்த வெறி கொண்டாரே அந்நாடுகளில் பூண்டு இல்லாதபடி போகும்படி செய்து முடிக்கும் வரை, யுத்தமும் முடியாது. போன யுத்தத்திற்கப்பால், ஜெர்மனியை சும்மாவிட்டது போல், இப்பொழுது ஜெர்மனியையோ அதன் கூட்டாளிகளையோ நேச தேசத்தார் விடப் போவதில்லை. மறுபடியும் இம்மாதிரியான கோர யுத்தமும், கொடிய சேதங்களும் ஏற்பட அவர்கள் இடந்தரப் போவதில்லை. எதிரிகளைப் பூரணமாக நிராயுதபாணிகளாக்கி விடுவதோடு, நமது ராணுவ பலத்தையும் எப்பொழுதும் குன்றாதவாறு காப்பாற்றிக் கொள்ளப் போகிறோம்.

இந்த விஷயங்களை யெல்லாம் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் எடுத்துக் கூறியதை ஜப்பானியத் தலைவர்களும் கட்டாயம் கேட்டிருப்பார்கள்.

அவர்களிடை இது காரணமாக ஏல்லாம் நடுக்கம் ஏற்படத் தொடங்கியிருக்கிறது. ஆகவே, இப்பொழுது, சென்ற சில காலமாகவே, ஜப்பானியர் சீனாவைத் தாஜா செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஜப்பானியர் நீலக் கண்ணீர்

'சீன சகோதரர்களே! அநியாயமாக வெள்ளைக்காரனோடு சேர்ந்து, பாழாகப் போகிறீர்களே! வெள்ளைக்காரன் வெள்ளைக்காரன் தான். நாம் கறுப்பு மனுஷர்கள் கறுப்பு மனுஷர்கள் தான். அவர்களை நம்பினால் சங்கடந்தான். பேசாது எங்களோடு சேர்ந்து கொள்ளுங்கள். நாம் இருவரும் எதற்காகச் சண்டை போட வேணும்? வேண்டுமானால், மஞ்சூரியா, பர்மோஸா ஆகிய இரு பிரதேசங்களைத் தவிர, மற்ற பிரதேசங்களில் இருந்தெல்லாம் நாங்கள் காலி செய்து விடுகிறோம்' என்று ஜப்பானியர் சொல்லுகிறார்களாம். என்ன ஆச்சரியம்!

உள்ளுக்குள்ளே உதைப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதில் இன்னும் சந்தேகமா? நேற்று வரை யார் மீது குண்டுகளை வீசிக்கொண்டிருந்தார்களோ, அவர்களோடு இன்று சமாதானம் பேச ஜப்பான் முன் வருகிறதென்றால், இனி அதற்கு வெற்றியில் நம்பிக்கையில்லை என்றாகவில்லையா? வெற்றியில் அது நம்பிக்கை வைத்தால் அது மகா தப்பாச்சே!

(4-ம் பக்கம் தொடர்ச்சி.)

டெம்பர் மாதம் 21-ம் தேதி காமன்ஸ் சபையில் பேசிய மிஸ்டர் சர்ச்சில் குறிப்பிட்டதாவது :—

" தாழ்வடைந்து கொண்டிருந்த பிரான்சை ஆசை மேலீட்டால் அநியாயமாக முசோலினி தாக்கினார். ஆகவே, பிரிட்டிஷ் சாமராஜ்யத்திற்கு விரோதியானார். அநேக ஆண்டுகளாக இத்தாலிய விடுதலையை பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மதித்து வந்திருக்கிறது. பிரான்சை அவர் தாக்கியது குற்றந் தான். அதை பரிகரிக்க முடியாது. தம் உரிமைகளையும் விடுதலையையும் சின்னாபின்னப் படுத்தி கொடுங் குற்றங்கள் புரியும்படி கொடுங்கோலர்களை அனுமதித்த நாடுகள், அதன் பலா பலன்களை அனுபவித்துக் கஷ்டப்பட வேண்டியது அவசியந் தான். என்றாலும், இந்தச் சமயத்தில் இத்தாலியர்கள் நடந்து கொண்டது நியாயம் என்று தான் நான் கருதுகிறேன். தம்மை மீட்டுக் கொள்ளும் பொருட்டு அவர்கள் செய்யும் பல வேலைகளில் இது முதல் வேலையாகவும் இருக்கலாம்!.... இத்தாலிய மக்கள் மகா கொடுமையாக எற்கெனவே கஷ்டப்பட்டு விட்டார்கள். அந்நாட்டு ஆண் மக்களின் உயிர்களெல்லாம் ஆப்பிரிக்காவிலும் ரஷ்யாவிலும் பலியாயின. போர் முனைகளில் இத்தாலியப் படைகள் கைவிடப்பட்டன. இத்தாலியின் பொருள்களெல்லாம் வீணாக நாசஞ் செய்யப்பட்டன. அவர்களுடைய சாம்ராஜ்யம் மீட்க முடியாதபடி அழிந்தது.

* * * *

இத்தாலியரையும் ஜெர்மானியரையும் நடத்தும் முறையில் வேற்றுமை.

ஜெர்மானியர்களை நடத்தும் முறைக்கும் இத்தாலியரை நடத்தும் முறைக்கும் வேற்றுமை யிருக்குமென்று கூறிய மிஸ்டர் சர்ச்சில், மேலும் சொன்னதாவது :—

" தாங்கள் பெருகி வாழும் பொருட்டு, ஜெர்மானியர்கள் நம் வாழ் நாட்களில் இரண்டு முறையும், நம் முன்னோர்கள் காலத்தில் மூன்று முறையும் ஆக்கிரமித்து உலக முழுவதையுமே போரில் இழுதது விட்டார்கள். சுயேச்சையை அவர்கள் மதிக்கிற தில்லை. ஆகவே, சுயேச்சையோடிருக்கிறவர்களைக் கண்டால், அவர்களுக்கு வெறுப்பு ஏற்படுகிறது.... ..பிரிட்டிஷாரும், அமெரிக்கர்களும், ரஷ்யர்களும் அளவிடுச் சொல்ல முடியாதபடி நாசமும், கஷ்டமும் உயிர் சேதமும் அடைந்திருக்கிறார்கள். உலக ஆதிக்கம் பெற வேண்டு மென்ற ஜெர்மானியர்களின் பேராசை காரணமாக, சென்ற 25 வருஷங்களுக்குள் இரண்டு முறை இப்படிப்பட்ட நஷ்டங்கள் நேர்ந்தன. பழிவாங்க வேண்டு மென்னும் எண்ணத்தோடு, நெடுநாட்களாகத் தயாரித்ததோர் போர் திட்டத்தைக் கொண்டு, ஜெர்மானியர்கள் மீண்டும் தலை தூக்காதபடி செய்யவேண்டியது இம்மூவருடைய கடமை. மனித வாழ்விலிருந்து அழிக்கப்படவேண்டியவை இரண்டு. முதலாவது, நாஜிக் கொடுமைகள்; இரண்டாவது ஜெர்மன் இராணுவத் தன்மை."

அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட் அமெரிக்க அரசாங்க சபைக்கு செப்டெம்பர் மாதம் 17-ம் தேதி அனுப்பியிருக்கும் செய்தியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

"ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். ஹிட்லரும் நாஜிகளும் ஒழிகிற போது, ப்ரஷியன் இராணுவக் கோஷ்டியும் அழிய வேண்டும். போரை வளர்க்கும் இந்த இராணுவக் கொள்ளைக் கூட்டத்தார் ஜெர்மனியை விட்டு அடியோடு ஒழிய வேண்டும். ஜப்பானை விட்டும் அவர்கள் அழிய வேண்டும். அப்போது தான் எதிர் காலத்தில் சமாதானமாக மக்கள் வாழக் கூடும் என்ற நம்பிக்கைக்கு இட முண்டு."

மூழ்கடிக்கப்பட்ட டேனிஷ் கப்பல்கள்

பிரஞ்சுக் கப்பற் படையைப் போலவே டேனிஷ் கப்பற்படையும் ஹிட்லருடைய நீர் மூழ்கிக் கப்பல்களைப் போல் மூழ்கடிக்கப்பட்டு விட்டன. இவைப் பற்றிய கீழ்க்கண்ட தகவல்கள் பயனுள்ளவையா யிருக்கும்.

1939-ம் வருஷம் டேனிஷ் கப்பற்படையில் கீழ்க்கண்டவை யிருந்தன:—

கப்பலின் வகுப்பு.	எண்ணிக்கை.	உள்ளடக்கம்.
பீரங்கிக் கப்பல்கள்	2	3,800 டன்
'இன்ஸ்பெக்ஷன்' அன் கரைப் பாதுகாப்புக் கப்பல்கள்	10	111-1·180 டன்
சுரங்கம் போடும் கப்பல்கள் ..	4	86-640 டன்
சுரங்கவாரிக் கப்பல்கள் ..	6	110 டன்
'சர்வே' கப்பல்கள்	2	80-718 டன்
'டார்பிடோ' கப்பல்கள்	6	290 டன்
'டார்பிடோ'க்களை ஏற்றிக் கொண்டு போகும் கப்பல்கள்	3	68 டன்
பழுதுகள் பார்க்கும் கப்பல் ..	1	463 டன்
நீர் மூழ்கிக் கப்பல்கள்	10	300 டன் (ஏறக்குறைய)

கணக்கிட முடியாத சிறிய கப்பல்கள்.

இவற்றில், மிகச் சிறந்தவையும் புதியவையும் தான் தப்பிக் கொண்டன வென்று தகவல் கிடைத்திருக்கிறது. அதாவது 1930-ம் வருஷத்திற்குப் பிறகு கட்டப்பட்ட டார்பிடோ கப்பல்கள் தப்பிக் கொண்டன.

நாலாம் இந்தியச் சேனையின் நற்புகழ்

இராகம்—மோகனம் தாளம்—ஆதி

பல்லவி

நாலாம் இந்தியச் சேனை நற்புகழ் எங்கும்
நாட்டும் பெருமைதனைக் கேட்டுளம் பொங்கும் (நாலாம்)

அநுபல்லவி

மேலாம் படை இதனின் மேவுதற் கில்லை என்றே
மேதினியில் ஓர் சொல்லை மேவினர் இவர் இன்றே (நாலாம்)

சரணங்கள்

1 ஆதி ஸித்தி பாரணி அதன் பின் கெரென் போரணி
அம்பா அலாகி முதல் அபிஸீனியாவில் எங்கும்
பீதி யடைந் தித்தாலிப் படைகள் பின் னடைந்தோடப்
பீரங்கி ஈட்டி கொண்டே பெருஞ்சயம் கொண்டார் அன்றே (நாலாம்)

2 என்றும் மறக்க வொண்ணு எல்லலா மீனில் அன்னுள்
எதிர்த்து ஜர்மன் நாசியின் இருப்புப் படை முறித்தே
கொன்றும் அதிர்த்துச் சென்றே மாரத் அரணை வென்றே
கொண்டும் டூனிஸை யன்றே கொண்டார்வான் ஆர்னிம் கைதி (நாலாம்)

3 லண்டனில் மேயர் முதல் லக்ஷக்கணக்காய் மக்கள்
கொண்டு மகிழ்ச்சி கூடிக் கூப்பிட் டருமை யுடன்
சண்டைத் திறத்திற் சிங்கம் சரிநிகர் இல்லாத் தங்கம்
பண்டைத் திறத்தோர் என்றும் பரிவாய்ப் புகழ்ந்தார் இன்றும் (நாலாம்)

"பாசிசக் கொள்கையினுல் எவ்வித பலனு மில்லை யென்று நமக்கு முந்தியே தெரியும். பலாத்காரத்தையும் வீண் பெருமையையும் கொண்டது தான் பாசிசம் என்று உலக மறியும்படி ஏற்பட்டு விட்டது. மனிதனின் நல்லுணர்ச்சிகளுக்கு அது முரண்பட்டிருப்பதனுல், மனிதனின் முன்னேற்றத்திற்கு அதில் இடமே கிடையாது. ஆகையால் பாசிச ஆட்சி நடைபெறுகிற வரையில், சமாதானமோ நீதியோ அங்கே காண முடியாது. பெர்லினிலும் டோக்கியோவிலும் நடைபெறும் ஆட்சி முறைகள் பாசிச ஆட்சி முறை போன்றவை தான். ஆகவே, இந்த இரண்டு ஆட்சி முறைகளையும் ஒழித்தாலல்லது, பாசிசத்தை அடியோடு ஒழித்ததாக அர்த்தமாகாது. இப்படிப்பட்ட ஆட்சி முறைகள் இத்தாலியிலாவது வேறெங்காவது தோன்றுவதற்கான அறிகுறிகளிருந்தால், உடனே அதை எதிர்த்து ஒழித்து விட வேண்டும்."

—ஹெய்லி சிலாசி, (எதியோப்பிய சக்கரவர்த்தி) செப்டெம்பர் மாதம் 19-ம் தேதி பத்திரிகைப் பிரதிநிதியிடம் கூறியது.

யுத்த நாட் குறிப்புகள்

பிரிட்டனும் ஜெர்மனியும்

செப்டெம்பர் 16.—வட மேற்கு ஜெர்மனியிலும் பெர்லினிலும் கேந்திர ஸ்தானங்கள் தாக்கப்பட்டன.

இங்கிலாந்தின் தென் கிழக்குப் பகுதிகளில் சில எதிரி விமானங்கள் வந்து தாக்கின. லண்டன் பகுதியிலும் மற்றும் சில பகுதிகளிலும் வெடிகுண்டுகளை எறிந்தன. இதனால் ஏற்பட்ட சேதம் மிகவும் கொஞ்சம் தான். வெகு சிலரே காயப்பட்டும் இறந்தும் போனவர்கள்.

செப்டெம்பர் 17.—பெர்லின் நகரத்திலுள்ள முக்கியமான இடங்களை 'மஸ்கிடோ' விமானங்கள் தாக்கின.

செப்டெம்பர் 18.—பெர்லின் நகரத்தின் கேந்திர ஸ்தானங்கள் தாக்கப்பட்டன.

செப்டெம்பர் 19.—ஸ்ரீமதி சர்ச்சில், சுபால்டர்ன மேரி சர்ச்சில் சகிதமாக மிஸ்டர் சர்ச்சில் லண்டன் வந்து சேர்ந்தார்.

செப்டெம்பர் 20.—மந்திராலோசனை சபைக் கூட்டத்திற்கு மிஸ்டர் சர்ச்சில் தலைமை வகித்தார்.

செப்டெம்பர் 21.—காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் யுத்த நிலைமையைக் குறித்து விளக்கிப் பேசினர்.

இம்பீரியல் இன்ஸ்டிட்டியூட்டில் வேவல் பிரபுவுக்கும் அவருடைய மனைவியாருக்கும் ஒரு வரவேற்பளிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் நிதி மந்திரி சர் சார்லஸ் கிங்ஸ்லி உட் காலமானர்.

பிரிட்டிஷ் விமானப் படை ஜெர்மனியைத் தாக்கியது.

ரஷ்யாவும் பின்லந்தும்

செப்டெம்பர் 16.—கருங்கடலிலுள்ள துறைமுகமான நொவோரோஸிஸ்க், நொவோரோக்ராட், செவெர்ஸ்கி, ரோம்னி, லோசொவயா, ஆகிய இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின. சோவியத் படைகள் திரண்டு ஸ்மாலென்ஸ்க் நகரத்தை நோக்கி முன்னேறிப் போய்க்கொண்டிருக்கின்றன. எல்லாப் போர் முனைகளிலும் சோவியத் படைகள் முன்னேறித் தாக்கிக் கொண்டிருக்கின்றன. ரஷ்யாவில் 212 ஜெர்மன் டிவிஷன் படைகள் போராடிக் கொண்டிருக்கின்றன.

ப்ரியான்ஸ்க் நகரத்தை நாஜிகள் கைப்பற்றினர்.

செப்டெம்பர் 17.—ப்ரியான்ஸ்கையும் ரெஜிட்டாவையும் சோவியத் படைகள் மீண்டும் கைப்பற்றிவிட்டன. ஜெர்மானியர்கள் டெஸ்னு ஆற்றுப் பக்கம் விரட்டப்பட்டார்கள். அங்கே பாதுகாப்பான இடங்களில் ஜெர்மன் படைகள் இருக்கின்றன. பெர்க்னி-யோக்மன், ஓ பெங்கோ என்னும் இரண்டு இடங்களையும் சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண்டன. லடோகா ஏரிக்குத் தெற்கே சோவியத் படைகள் தாக்கின. க்ராஸ்னேக்ராடுக்கு உள்ள ஆபத்து அதிகப்பட்டது.

செப்டெம்பர் 18.—நீபோ பெட்ரோப்ஸ்க்குக் கிழக்கேயுள்ள முக்கியமான ரயில்வே ஜங்ஷனை பவ்லோகிராடும் மற்றும் 230 இடங்களும் சோவியத் படைகள் வசமாயின. ப்ரிலூகி என்னும் பட்டணம் முற்றுகையிடப்பட்டது. ஸ்மாலென்ஸ்க்குத் தென் கிழக்கே புதிய இடங்களில் போராட்டங்கள் நடைபெற்றன. ஜெனரல் ரொகோசோப்ஸ்கியின் சோவியத் படைகள் கீயேவ் நகரத்திற்கு அப்பால் 45 மைல்களுக்கு உள்ளாகத்தான் இருந்தன.

செப்டெம்பர் 19.—யார்ட்சிபோ, டுரோப்ஸ்சைனு, ஆகிய ஸ்மாலென்ஸ்க் போர் முனையிலுள்ள இடங்களும், கீயேவுக்குப் போகும் வழியிலுள்ள ப்ரிலூக்கி, லுப்னி, க்ராஸ்னேக்ராட், ரோம்னி என்னும் இடங்களும் ப்ரையான்ஸ்க் போர் முனையிலுள்ள ட்ருப்சேஸ்க் ஆகிய இடத்தையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. அன்றியும், மொரோக்ராட், ரோமடான், அம்சபோ ஆகிய முக்கியமான இடங்களையும், 350 இடங்களையும் கைப்பற்றினார்கள்.

சோவியத் ரஷ்யாவிலுள்ள அமெரிக்கத் தூதர் அட்மிரல் வில்லியம் எச். ஸ்டான்லி தன் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்டைக் கலந்து ஆலோசிக்கும் பொருட்டு, மாஸ்கோவை விட்டு வாஷிங்டனுக்குப் புறப்பட்டார்.

செப்டெம்பர் 20.—போல்ஷியா-டோக்மக், க்ரிபெங்கோ என்னும் ரயில்வே ஜங்ஷன் ஆகிய இரண்டு இடங்களையும் ரஷ்யப் படைகள் கைப்பற்றின. ஸ்மாலென்ஸ் நகரத்திற்கு அப்பால் 30 மைல் தூரத்திற்குள்ளாகவே, அதை வளைந்தது போல, மூன்று ரஷ்யப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. க்ரிமினே செக் என்னும் முக்கியமான ரயில்வே ஜங்ஷன் நீப்பருக்குப் போகும் வழியிலிருக்கிறது. இதை நோக்கி சோவியத் படைகள் முன்னேறுகின்றன.

கீவ் நகரத்தை நோக்கி சோவியத் படைகள் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

சோவியத் அரசாங்க வெளியீடான 'ப்ரவ்டா' பத்திரிகையில் ஒரு அறிக்கை வெளியாகி யிருக்கிறது. இப்போது ரஷ்யாவில் யுத்தக் கைதிகளாயிருக்கும் ஜெர்மன் உத்தியோகஸ்தர்கள் தம் சங்க வாயிலாக இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கின்றனர். ஹிட்லரைத் தோற்கடித்துவிடும்படி ஜெர்மன் படைத் தலைவர்களை வேண்டிக் கொள்ளுவது தான் இந்த அறிக்கை.

செப்டெம்பர் 21.—டெஸ்னு ஆற்றின் வட பகுதியிலுள்ள சினெல்கொபோ, செர்னிகோப் ஆகிய ஊர்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

கீயேவுக்கு 25 மைல் தூரத்தில் செம்படைகள் இருக்கின்றன.

விஷி, சுயேச்சை பிரான்ஸ், எதிரிகள் வயப்பட்ட நாடுகள்

செப்டெம்பர் 16.—பாரிஸ், ரோமில்லி, மெர்வில்லி, ப்ரயாஸ்ஸட் ஆகிய இடங்களிலுள்ள விமான தளங்களையும் போக்கு வரவு சாதனங்களையும், நான்டிசிலுள்ள கப்பற் படைத் தளங்களையும் நேச நாட்டு விமானங்கள் தாக்கின.

எட்ரியாடிக் கடலிலுள்ள ஸ்பாலடோ என்னும் துறைமுகத்தை யுகோஸ்லாவ் சுதேசத் துருப்புக்கள் கைப்பற்றின.

செப்டெம்பர் 17.—மொடேன் என்னும் இடத்திலுள்ள சாமான்கள் இறக்கும் தளத்தையும், மாண்ட் பெனிஸ் என்னும் குகைப் பாதைக்கு அருகிலுள்ள பிரஞ்சு எல்லைப்புரப் பட்டாளத்தையும், செனட் ரபேரிலுள்ள மேப்பாலத்தையும் வெடி குண்டுகளால் நேச நாட்டுப் படைகள் தாக்கின. பிரான்சிலும் மற்ற சம பூமிகளிலுமுள்ள விமான நிலையங்களையும் கேந்திர ஸ்தானங்களையும் போர் விமானங்கள் தாக்கின. நான்டிஸ், லா பாலிஸ், கோக்ரேஸ், லா ரோச்செல்லா, போமான், லா ரோஜர், ட்ரிக்யுல்லி முதலிய கேந்திர ஸ்தானங்களும் தாக்கப்பட்டன. லா ஹாவ்ரே என்னும் துறைமுகத்திலுள்ள போர்க் கப்பல்களும் தாக்கப்பட்டன.

பல்கேரியர்கள் அல்பேனிய எல்லைப்புரம் வரை கைப்பற்றிக் கொண்டனர்.

செப்டெம்பர் 18.—பிரிட்டனியிலுள்ள கேந்திர ஸ்தானங்களை, "வர்ல்வின்ட்", "மஸ்கிடோ" விமானங்கள் தாக்கின.

ஸ்பிலிட், சோலின், ட்ரோகிர் என்னும் யுகோஸ்லாவ் பட்டணங்களை நாஜி விமானங்கள் வெடிகுண்டுகளை எரிந்து நாசப்படுத்தி பெண்களையும் குழந்தைகளையும் கொன்றன.

நார்வேயை விட்டு 20,000 ஜெர்மன் துருப்புகள் கிளம்பிவிட்டன.

செப்டெம்பர் 19.—ரைன்லாந்திலுள்ள கேந்திர ஸ்தானங்களையும், வில்லி விமான நிலையத்தையும் நேச நாட்டு விமானப் படைகள் வெடிகுண்டுகளைக் கொண்டு தாக்கின.

செர்பிய முதன் மந்திரியான ஜெனரல் மிலான் நிடிச்சுக்கு ஹிட்லர் பேட்டி கொடுத்தார். பான் ரிப்பன்ட்ராப் ஹிட்லருடன் நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

பால்கனில் ஏராளமான ஜெர்மன் துருப்புகள் நடமாடுவதாகத் தெரிகிறது.

செப்டெம்பர் 20.—மான்டிக்ரின் கரை முழுதையும் யுகோஸ்லாவ் விடுதலைப் படை தாக்கியது.

செப்டெம்பர் 21.—ஜெர்மனிக்கும் இத்தாலிய பாசிச அரசாங்கத்திற்கும் சாதகமாக போப்பாண்டவர் இருக்கா விட்டால், பாலாத்காரத்தை கையாள வேண்டி வருமென்று, நாஜிகள் எச்சரித் திருக்கிறார்கள்.

தூரக் கிழக்கு நாடுகள்

செப்டெம்பர் 16.—இன்று அமெரிக்காவிலுள்ள சீன அரசாங்கத் தூதரான டாக்டர் டி. வி. சூங், ஜெனரலாஸிமோ ஷியாங்-கெய்-ஷேக் அனுப்பியுள்ள இரகசியச் செய்தியை அமெரிக்கத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட்டிடம் நேரில் கண்டு கொடுத்தார்.

நியூ கினியிலுள்ள முக்கியமான ஜப்பானிய தளம் லே. இதை நேச நாட்டுப் படைகள் எல்லாத் திசைகளிலும் வளைத்துக் கொண்டன.

"யமடா மாரு" என்னும் ஜப்பானியக் கப்பலை, நேச நாட்டு நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று கீழ சீனக் கடலில் மூழ்கடித்துவிட்டது.

செப்டெம்பர் 17.—கப்பல்கள் நங்கூரம் பாய்ச்சும் மலஹாங் என்னும் இடத்தை, நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன. இவா, விவாக் என்னும் பட்டணங்களிலுள்ள எதிரி ஸ்தாபனங்களின் மீது வெடி குண்டுகள் வீசப்பட்டன. ஒரு பெரிய விமானப் போரில் 50 ஜப்பானிய விமானங்கள் நாசமாயின.

குடால்கனல் பகுதியைச் சேர்ந்த செங்கா முனைப் பகுதியை ஜப்பானிய விமானங்கள் வெடி குண்டுகளால் தாக்கின. இது ரஸ்ஸல் தீவில் அமெரிக்காவிற்குச் சொந்தமான பகுதி.

நியூ கினியில் தமக்குக் கிடைத்த தோல்விக்குப் பிறகு அநேக ஜப்பானிய சோல்ஜர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

சீனவில் இந்திய எஜெண்ட் ஜெனரலாயிருக்கும் மிஸ்டர் கே. பி. எஸ். மேனன் சூங்கிங்குக்கு இன்று புறப்பட்டார்.

செப்டெம்பர் 18.—இத்தாலியக் கப்பற் படை சரணகதி யடைந்து விட்டதனல், ஜப்பானிய மண்டைப் புழு மாண்டு விட்டதென்று ஜெனரலாஸிமோ ஷியாங்-கே-ஷேக் தெரிவித்தார்.

ஜப்பானியர்களோடு, சளைக்காது போராடிக் கொண்டிருக்கும் சீனர்களின் வீரத்தை அமெரிக்க மந்திரி மிஸ்டர் கார்டல் ஹல் பாராட்டிப் பேசினர்.

ஜெனரல் டோஜோ தன் பதவியை ராஜிநாமா செய்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நியூகினியிலுள்ள பெரிய ஜப்பானிய தளமான லே நேசநாட்டினர் வயப்பட்டது.

ஷிலோவிலுள்ள படை வீடுகளையும், யாங்சியுவிலுள்ள பண்டகசாலைகளையும், க்யுக்யாங்கிக்கு அருகிலுள்ள முகாம் ஸ்தாபனங்களையும், நான்சாங்கிலுள்ள வெடிமருந்து சாலைகளையும் ஹெய்பாங்கிலுள்ள கேந்திர ஸ்தானங்களையும் அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

செப்டெம்பர் 19.—தாரவா, நவா என்னும் தீவுகளிலுள்ள ஜப்பான் தளங்களை அமெரிக்க வெடிகுண்டு விமானங்கள் தாக்கின.

செப்டெம்பர் 20.—வட சாலமன் தீவில் 4 ஜப்பானியப் போர் விமானங்கள் நாசஞ் செய்யப்பட்டன. நியூ பிரிட்டனுக்கு அப்பால் துருப்புக்களை ஏற்றிக் கொண்டு வந்த 2 கப்பல்கள் நாசஞ் செய்யப்பட்டன. டார்வின் தாக்கப்பட்டது.

ஹோ ஜில்லாவைச் சேர்ந்த யாங்சின் என்னுமிடத்தை அமெரிக்க விமானப் படை தாக்கிய போது, 1,500 கப்பற் படைத் துருப்புகள் கொல்லப்பட்டனர்.

இந்தியா, பர்மா, இலங்கை

செப்டெம்பர் 16.—இந்திய வைசிராயாக நியமிக்கப்பட்டிருக்கும் பீல்ட் மார்ஷல் வைகௌண்ட் வேவல் 'பில்க்ரிம்' விருந்தின் போது பேசுகையில் கூறியதாவது: "யுத்தம் விரைவில் முடிந்துவிடா தென்றும், ஜெர்மனியைப் போலவே ஜப்பானும் அடியோடு வெல்லப்பட்டாலல்லது கீழைப் பிரதேசங்களுக்காவது, நமக்காவது அல்லது உலகத்திற்காவது இராணுவப் பாதுகாப்போ, பொருளாதாரப் பாதுகாப்போ இடையாது என்பதை நீங்கள் அனைவரும் உணர்ந்திருக்கிறீர்கள்."

பர்மாவிலுள்ள ஷ்விபோ, மாங்வா முதலிய இடங்களுக்கும் மற்ற இடங்களுக்கு மிடையேயுள்ள ஜப்பானியப் போக்கு வரவு சாதனங்கள் தாக்கப்பட்டன. அநேக 'ஜப்பான்' படகுகள் மூழ்கடிக்கப்பட்டன, அல்லது சேதப்படுத்தப்பட்டன. வட பர்மாவிலுள்ள நாகமலையில் சீனத் துருப்புகள் 200 ஜப்பானியர்களோடு போராடின. மேமியோவும் மாண்டலேயும் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டன.

செப்டெம்பர் 18.—ப்ரோமிலுள்ள ஜப்பானிய போக்குவரவு சாதனங்களும் ஸ்தாபனங்களும், ஹென்சடாவிற்கு அருகிலுள்ள படை வீடுகளும், புதிடாங்கிலுள்ள கிராமங்களையும் பிரிட்டிஷ் விமானப் படைகள் வெடிகுண்டுகளைக் கொண்டு தாக்கின. நாபா ரயில்வே ஜங்ஷனும் பாங்யாங் ஜங்ஷனும் தாக்கப்பட்டன.

செப்டெம்பர் 19.—முக்கியமான போக்கு வரவுப் பதையிலுள்ள டாங்கப்பும் ஆக்யாபும் தாக்கப்பட்டன.

செப்டெம்பர் 20.—ஒரு ஜப்பான் விமானம் கொழும்புக்கு அருகில் வந்தது, பின் வாங்கிப் போய்விட்டது.

செப்டெம்பர் 21.—நேச நாட்டு விமானங்கள் மாங்டாவிலுள்ள எதிரி கட்டடங்களைத் தாக்கின.

நடு நிலைமை நாடுகள்

செப்டெம்பர் 16.—சுவித்சர்லந்தை எல்லா பக்கங்களிலும் ஜெர்மன் சுங்க அதிகாரிகள் தடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்காவும் அட்லான்டிக்கும்

செப்டெம்பர் 18.—தாம் மேற் கொண்டிருக்கும் வேலைக்கு இன்னும் 77 லட்சம் பேர்களைக் கொண்ட படை தேவையா யிருக்கின்ற தென்று அமெரிக்க இராணுவ நிர்வாக உதவித் தலைவரான லெப்டினென்ட் ஜெனரல் ஜோசப் டி. மெக்னர்னி, அரசாங்க சபையின் இராணுவ விஷயக் கமிட்டியாருக்கு அறிவித்தார்.

செப்டெம்பர் 17.—எல்லாப் போர் முனைகளிலும் நடைபெறும் யுத்த நிலைமையைக் குறித்து தெளிவான தோர் அறிக்கையை அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் அரசாங்க சபைக்கு அனுப்பினர்.

கர்னல் ப்ராங்க் நாக்ஸ் லண்டனுக்கு வந்து சேர்ந்தார்.

செப்டெம்பர் 18.—பிரிட்டிஷ், அமெரிக்க, சோவியத் அந்நிய நாட்டு மந்திரிகள் சந்திக்கும் இடம் இன்னது என்று இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

செப்டெம்பர் 20.—சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, சர்வ தேச ஒப்பந்தங்கள் செய்யப்படுவதை ஒப்புக் கொள்ளவோ, நிராகரிக்கவோ, பூரண அதிகாரம் அமெரிக்கக் காங்கிரசுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்னும் தீர்மானத்திற்குக் கொண்டு வரப்பட்ட திருத்தத்தை, பிரதிநிதி சபையின் அந்நிய நாட்டுக் கமிட்டி அங்கீகரித்தது.

மத்திய பசிபிக் போர் முனைக்கு ஒரு தனி படைத்தலைவரை 'ஹாவாய்' என்னுமிடத்தில் நியமிருத்திருக்கிறார்கள்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல்.

செப்டெம்பர் 16.—செலெர்னோ கடற்கரையிலிருந்த நெருக்கடியான நிலைமையை வென்று விட்டோம். ஐந்தாம் டிவிஷன் படை தாக்கிக் கொண்டிருந்தது. எட்டாம் படை ஸ்கேலியா வந்தடைந்து சாப்ரியை யடுத்துக் கொண்டிருக்கிறது.

பழைய இத்தாலிய இராணுவ நிர்வாகியான மார்ஷல் உகோகாவெல்லரோ தற்கொலை செய்து கொண்டார்.

டடகனீஸ் தீவுகளைச் சேர்ந்த லிரோ தீவையும், ஏஜியனைச் சேர்ந்த சாமாசையும் நேச நாட்டுப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

செப்டெம்பர் 17.—செலெர்னோவிற் கருகில் ஐந்தாம் டிவிஷன் படையோடு எட்டாம் படையும் வந்து சேர்ந்து கொண்டது. இதனல் நேசப் படைகளின் நிலைமை மேம்பட்டது. மான்டிகார்விேனாவையும் நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

இத்தாலியின் தென் பகுதியிலுள்ள மூன்று மாகாணங்கள் முழுதும் நேசப் படைகளின் பூரண ஆதிக்கத்திற்கு உட்பட்டுவிட்டன. ஜெனரல் அலெக்சாந்தர் சாலெர்னோவிற்கு விஜயம் செய்தார்.

செப்டெம்பர் 18.—சாலெர்னோவிலிருந்து ஜெர்மன் படைத்தலைவரான ஜெனரல் கேசல்ரிங் பின் வாங்கத் தலைப்பட்டார். ரோசிடா, போன்சா, இஸ்சியா ஆகிய நேபில்ஸ் நகரத்திற்கு அருகிலுள்ள தீவுகளை கப்பற் படைகள் கைப்பற்றின. இத்தாலியில் ரொக்கொடாஸ்பிட் என்னும் ஊரையும் நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டன.

ரோட்ஸ், லோஸ் ஆகிய இரண்டு தீவுகளிலும் நேசப் படைகள் இறங்கி அவற்றைக் கைப்பற்றிக் கொண்டன.

முசோலினி, தான் தப்பிய காதையைக் கூறியும், இத்தாலிய அரசரான விக்டர் இம்மானுவேலைத் தாக்கியும் ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார்.

செப்டெம்பர் 19.—சாலெர்னோ பகுதியில் நேசப் படைகள் முன்னேறிக் கொண்டு போகின்றன. விமான தளமும் போக்கு வரவிற்கு மிகவும் முக்கியமான இடமுமான பட்டிபாக்ளியா பட்டணமும், அலடாவில்லாவும் கைப்பற்றப்பட்டன.

நேச நாட்டினர் வயப்பட்ட இத்தாலியப் பகுதியில் மார்ஷல் படோக்லியோ இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போப்பாண்டவர் ஒரு கைதியைப் போலவே நடத்தப்படுவதாகத் தெரிகிறது.

மத்தியதரைக் கடலில் உள்ள முக்கியமான கேந்திர ஸ்தானமும் பெரிய தீவுகளில் இரண்டாவது ஸ்தானம் வகிப்பதுமான சார்டீனியா தீவை ஜெர்மானியர்கள் அடியோடு காலி செய்துவிட்டார்கள்.

செப்டெம்பர் 20.—சாரண்டோ தீபகற்பத்திலுள்ள மலையுச்சி மிகவும் போராட்டத்திற்கு ஏற்றது. இதை ஐந்தாம் டிவிஷன் படையினர் கைப்பற்றிக் கொண்டனர். அன்றியும் அமால்பியையும் கைப்பற்றிக் கொண்டனர். எட்டாம் படை க்ரோஜாவைப் பிடித்தது.

இத்தாலியிலுள்ள எல்லா ரயில்வே சிப்பந்திகளும் வேலை நிறுத்தம் செய்துவிட்டனர்.

இத்தாலியில் ஜெர்மானியர்கள் மேலும் இருக்க விரும்புவார்களானல், அவர்களை எதிர்த்து வீழ்த்தி விடவேண்டுமென்று இத்தாலிய மக்களுக்கு மார்ஷல் படாக்ளியோ ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

டடக்கனீஸ் தீவுகளைச் சேர்ந்த காஸ்டலோரிசோ தீவை நேச நாட்டினர் கைப்பற்றிக் கொண்டனர்.

செப்டெம்பர் 21.—அமெரிக்கன் வெடி குண்டு விமானங்கள் இபோலி என்னு மிடத்தைக் கைப்பற்றின. வேனிஸ், பிஸ்காரா, மலிம் ஆகிய ஊர்களைத் தாக்கின. ஸ்கார்பென்டோவுக்கு அப்பாலுள்ள கப்பலொன்றையும் தாக்கின.

ஜெர்மானியர்கள் நேப்பில்ஸைத் தாக்கினர்கள்.

பிரான்சு படைகள் கார்சிகாவின் மேல் பகுதியைக் கைப் பற்றிக் கொண்டன.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.